
குழந்தைகள் பத்திரிகை
8-6-1975
50 காசு

கோகுலம்



புதுமை



இந்தியாவில் இதுவே
முதல் முறை

கேம்லின் பேனா


தன்னுள்ளவே அமைந்த
பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்

ஞகதேர்ந்த கரத்துக்குப் பொருத்தமான
கச்சிதமான பேனா. முத்தான எழுத்துக்கு
இதுவோர் சத்தான துணை.
உள்ளமைந்திருக்கும் ஒரு வியப்பூட்டும்
அமைப்பால் தெள்ளத் தெளிவான
மணிமணியான எழுத்துக்கள்
வடிவம் பெறுகின்றன.
வழக்கமாக கொள்ளும் அளவைவிட
இரட்டிப்பு அளவு மை நிரப்ப, இந்தத்
தனிப்பட்ட பிஸ்டன் ஃபில்லிங் ஸிஸ்டம்
வழி செய்வதால், நெடு நீண்ட நேரம் எழுதிக
கொண்டே இருக்கலாம்.

மை நிரப்பும் வேளையிலே
தருவதில்லை தொல்லை. கை எழுதும்
வேளையிலே தங்குதடை இல்லை!

கேம்லின் பேனாக்கள் மற்றும் பால்-பேனாக்கள்
மனதுக்கு இசைந்த எண்ணற்ற
நிறங்களில் கிடைக்கின்றன.

கேம்லின் பிரை. லி.,
ஸ்டேஷனரி டிவிஷன், பம்பாய்.



Vision 752 Tam.



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

கோகுலம்

மலர் 4 □ இதழ் 5

ஜூன் 8, 1976 : ராட்சஸ, வைகாசி 25


சந்தா விவரம் :

உள்நாடு: ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள்: ஆண்டுச் சந்தா ரூ. 27-50




இது ஒரு விசேஷமான கத்தி. பாரதத்தில் ஆட்சி புரிந்த ஓர் இனத்தின் குதிரைப் படை வீரர்கள் இக் கத்தியைப் பயன்படுத்தினர். கைப்பிடியை அழுத்தி அழுக்கினால் துப்பாக்கியிலிருந்து விடுபடும் குண்டுபோல இதிலிருந்து கூரான கத்தி சீறிக் கொண்டு வெளிப்படும். இந்தக் கத்தியின் பெயர், பயன் படுத்தியவர் யார் தெரியுமா?

(விடைகள் 5ம்
பக்கம் பார்க்க)



எந்தப் புராணத்திலே வரும் ராட்சதன் இது? மாமிச மலையைப் போலக் காணப்படும் இந்த மனிதரைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?





வசந்த காலத்தையும் மணமுள்ள வண்ண மலர்களையும் தோற்றுவிக்கும் ஸீபே (Xipe) என்ற கடவுளின் சிலை இது. முன்னாலுள்ள வட்டக்கல் பலிபீடமாகும். ஸீபே கடவுளை வணங்கிய சமூகத்தினர் யார் தெரியுமா?

அம்மை ❀ அப்பன்

❀ ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் ❀

[பள்ளிக்கூடம் திறக்க இன்னும் சில தினங்களே இருக்கின்றன. படிக்கப்போகும் உங்களுக்காகவே ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் அவ்வப்போது அருளிய உரைகளிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் திரு ரா. கணபதி.]

இந்த உலகம் முழுவதையும் நடத்துகிறவர் ஸ்வாமி. இதில் மனிதர்கள் இருக்கிறோம். மிருகங்கள் இருக்கின்றன. பட்சிகள் இருக்கின்றன. புழு பூச்சிகள் இருக்கின்றன. மரம் செடி கொடி புல் பூண்டு எல்லாம் இருக்கின்றன. இவை எல்லாம் கொண்ட ஒரு பெரிய குடும்பமே உலகம். அந்தக் குடும்பத்தை நடத்துகிறவர் ஸ்வாமி.

நம்முடைய சிறிய குடும்பம் ஒவ்வொன்றையும் அம்மா, அப்பா என்ற இரண்டு பேர் நடத்துகிறார்கள். குடும்பம் நடப்பதற்குச் சாமான்கள் வேண்டியிருக்கின்றன. அவற்றை வாங்குவதற்குப் பணம் வேண்டியிருக்கிறது. அப்பா என்கிறவர் உத்தியோகம் செய்து, சம்பளமாகப் பணம் வாங்கிக் கொண்டு வருகிறார். அந்தப் பணத்தைக் கொண்டு சாமான்கள் வாங்கிப் போடுகிறார். இந்தச் சாமான்களை வைத்துக் கொண்டு அம்மா சமைத்துப் போடுகிறாள்; மற்ற வீட்டுக் காரியங்களைச் செய்கிறாள்.

ஸ்வாமி மனிதர்களை விட ரொம்பப் பெரியவர். நம்மை விட அவருக்குச் சக்தி ரொம்பவும் அதிகம். அதனால் அவருடைய உலகக் குடும்பத்தை நடத்துவதற்கு ஒருத்தர் சம்பாதிக்க வேண்டும், இன்னொருத்தர் சமைத்துப் போட வேண்டும் என்று இல்லாமல் அவர் ஒருவராகவே நடத்தி விடுகிறார்.

நம் அப்பா அம்மா மாதிரி, ஸ்வாமி சரக்குகள் வாங்க வெளியே போகவேண்டாம். எல்லாச்சரக்குக்கும் மூலம் அவரே தான். குணங்களும் சரக்குகள் மாதிரி தான். இந்தக் குணங்கள் எல்லாவற்றுக்கும்கூட ஸ்வாமியேதான் மூலம். அவர் குணக்கடல். எல்லாக் குணங்களும் அவரிடமிருந்து தான் வந்தன. அப்பாவும் அம்மாவும் நமக்குத் தருகிற சாமான்களுக்கெல்லாம் மூலம் ஸ்வாமியிடமே இருக்கிற மாதிரி, இவர்கள் இருவரும் நம்மிடம் காட்டுகிற அன்புக்கும் மூலம் ஸ்வாமியிடம்தான் இருக்கிறது. நமக்கு எப்போதும் நல்லதையே நினைத்துக் கொண்டு, நம்முடைய சந்தோஷத்துக்காக எத்தனை கஷ்டத்தையும் தாங்கிக் கொள்கிற அன்பு நம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இருக்கிறதல்லவா? நாம் நல்லவர்களாக வேண்டும்; புத்திசாலிகளாக வேண்டும். நாம் வாழ்க்கையில் நன்றாக முன்னுக்கு வரவேண்டும் என்பதுதானே நம் பெற்றோரின் ஒரே குறிக்கோளாக இருக்கிறது? இதற்காகவேதான் அவர்கள் சில சமயங்களில் நம்மைத் தண்டிக்கிறார்கள், கண்டிக்கிறார்கள். இதைக் கொண்டு நாம்





அவர்களிடம் கோபப்படக் கூடாது. நம்முடைய நல்லதை நினைத்தேதான் அவர்கள் கண்டிக்கிறார்கள் என்று உணர வேண்டும். அவர்கள் கோபித்துக் கொண்டாலும் அதற்குக் கூடக் காரணம் நம்மிடம் அவர்களுக்குள்ள அன்புதான். இந்த அன்பினால்தான் அவர்கள் நம்மை வளர்த்துப் படிக்க வைத்து, நமக்கு உடம்புக்கு வந்தால் இரவெல்லாம் கண் விழித்துக் கவனித்து, எல்லாக் காரியங்களும் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட அன்பு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்று பார்த்தால், இந்த அன்பு என்ற சரக்குக்கும் மூலம் ஸ்வாமிதான். ஸ்வாமியேதான் அப்பா அம்மா என்கிற உருவங்களில் வந்து நம்மிடம் அன்பைச் செலுத்துகிறார்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

நம் அப்பாவையும் அம்மாவையும் ஸ்வாமியாக நினைக்க வேண்டும்.

இதையே மாற்றி ஸ்வாமியையும் அப்பா அம்மா என்ற உருவங்களில் நினைக்க வேண்டும். ஸ்வாமி எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்றால் அவருக்கு நம்மைப் போல் உருவம் இருக்க முடியாது. ஆனால் உருவம் இல்லாத ஒருவரை எப்படி நினைப்பது? அதனால் அவரை அப்பா அம்மா என்ற இரு உருவங்களில் நினைக்க வேண்டும். நமக்குத் தெரிந்தவர்களில் நம்மிடம் ரொம்ப அன்பாக இருப்பது தாய், தந்தையர் தானே? அன்பாக இருப்பவர்களை நினைத்துக் கொண்டால்தான் நமக்கும் சந்தோஷமாக இருக்கிறது. அதனால் ஸ்வாமியை அம்மாவாக, அப்பாவாக, இரண்டும் சேர்ந்த அம்மையப்பனாக நினைத்துப் பக்தி செலுத்த வேண்டும்.

பார்வதி என்ற அம்மாவாகவும், பரமசிவன் என்ற அப்பாவாகவும் அவர் ஆகியிருக்கிறார்; லக்ஷ்மி என்ற அம்மாவாகவும் மஹாவிஷ்ணு என்ற அப்பாவாகவும் ஆகியிருக்கிறார்; சீதை என்ற அம்மாவாகவும் ராமர் என்ற அப்பாவாகவும் ஆகியிருக்கிறார்.

இந்த உருவங்களை நினைத்துக் கொண்டாலே அன்பாக இருக்கிறது, சந்தோஷமாக இருக்கிறது.

மனத்தில் அன்பும் சந்தோஷமும் இருக்கிறபோதுதான் புத்தி தெளிவாக இருக்கிறது. புத்தி தெளிவாக இருக்கிறபோது படித்தால் பாடம் நன்றாக ஏறுகிறது. கோபம், ஆத்திரம், அழுகை பொறாமை எல்லாம் உண்டாகிறபோது புத்தி குழம்பிப் போகிறது. அப்போது படிப்பும் ஏறமாட்டேன் என்கிறது.

தினமும் கொஞ்ச நாழி ஸ்வாமியைப் பார்வதி — பரமசிவனாகவோ, மகாலக்ஷ்மி — மகாவிஷ்ணுவாகவோ நினைத்துக்கொண்டு விட்டீர்களானால் மனம் நல்லதாக ஆகும், புத்தியும் தெளிவாக ஆகும். அதனால் படிப்பும் நன்றாக வரும் நன்றாகப் பாஸ் பண்ணி விடலாம்.

ரொம்பப் புத்திசாலியாக இருந்து நிறைய மார்க் வாங்கிப் பாஸ் பண்ணி



னால்கூட, நல்லவன் என்ற பெயரெடுக்காவிட்டால் பிரயோஜனம் இல்லை. நல்ல பெயர் இல்லாவிட்டால் பிற்காலத்தில் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. நல்லவனாக இருந்துவிட்டால் அது நமக்கும் சந்தோஷம்; மற்றவர்களுக்கும் சந்தோஷம்; பெரியவனான பின் வாழ்க்கையில் முன்னுக்கு வருவதற்கும் அதுதான் உதவும்.

நம்மை நல்லவர்களாக, புத்திசாலிகளாக, இரண்டாகவும் செய்வது ஸ்வாமியிடம் நாம் வைக்கிற பக்திதான்.

இந்தச் சின்ன வயதிலிருந்தே ஸ்வாமியைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்போதுதான் அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவும் முடியும். வயதாக ஆக வேறு பல தினுசான ஆசைகள் எல்லாம் வந்து, ஸ்வாமியை நினைக்க வொட்டாமல் இடைஞ்சல் செய்யும். இப்போது உங்களுக்கு அந்த இடைஞ்சல் இல்லை. அதனால் இப்போதே அவரிடம் பக்தி வைக்கப் பழகிவிட்டால், அப்புறம் கூட அந்த ஆசைகள் உங்களிடம் வந்து உபத்திரவம் பண்ணாது.

நீங்கள் எல்லோரும் க்ஷேமமாக இருக்க வேண்டும். நிறைய மார்க் வாங்கி, நன்றாய்ப் பாஸ் பண்ணி வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வரவேண்டும். இதற்கெல்லாம் வழியாக இப்போதிலிருந்தே ஸ்வாமியிடம், அம்மையப்பனிடம் பக்தியோடு இருங்கள்.

இப்போது நாம் இத்தனை பேரும் ஒரே ஒரு மரத்தின் நிழலில் இருக்கிறோம். ரொம்ப வருஷங்களுக்கு முன் இத்தனூண்டு சின்னதாக இருந்த ஒரு செடிதான் இப்போது இவ்வளவு பேருக்கும் நிழல் தருகிற மரமாக ஆகியிருக்கிறது. இன்றைக்குச் சின்னவர்களாக இருக்கிற நீங்களும் பெரியவர்களாகிற போது இந்த மரம் மாதிரிப் பல பேருக்கு உபகாரமாக இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பது பிறருக்கெல்லாம் உபகாரம் செய்வதற்காகத்தான். நிறையச் சம்பாதித்து அதை யெல்லாம் நமக்காகவே செலவழித்துக் கொண்டால் ஸ்வாமி சந்தோஷப்பட மாட்டார். அவருக்கு நாம் எப்படிக் குழந்தையோ அதேமாதிரி ஏழைகள், நோயாளிகள், அநாதைகள் எல்லாரும் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு நாம் உபகாரம் பண்ணாமல் நமக்கே செலவழித்துக் கொண்டால் ஸ்வாமி அதற்கப்புறம் நமக்கு அருள் செய்ய மாட்டார்.

அதனால் நீங்கள் எல்லோரும் உலகத்துக்கு உங்களால் முடிந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும். அதில் உங்களுக்கு ஒரு பெரிய சந்தோஷமும் திருப்தியும் உண்டாகும். நீங்களே சாப்பிடுவதை விட ஓர் ஏழைக்குச் சாப்பாடு போட்டால் அதில் உங்களுக்கு இன்னும் ஜாஸ்தி இன்பம் உண்டாகும். நாம் பிறந்திருப்பதே மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் என்று தெரியும். இப்படி உங்களுக்கு முடிந்த உதவியைச் செய்து நீங்கள் மற்றவர்களின் மனத்தைக் குளிர வைத்தால் அதைப் பார்த்து ஸ்வாமியும் உங்களிடம் மனம் குளிர்ந்து நிரம்ப அருள் செய்வார்.

உங்களிடம் மற்றவர்களுக்கு நல்ல அபிப்பிராயம் வந்தால் அவர்களும் நீங்கள் செய்வதைப் பின்பற்றுவார்கள். நீங்கள் ஸ்வாமியைத் தொழுவதைப் பார்த்து அவர்களும் தொழுவார்கள். பக்தியினால் உங்களுக்கு உண்டாகிற ஆனந்தமும் நல்லறிவும் அவர்களுக்கும் கிடைக்கும். ஆனபடியால் நீங்கள் ஸ்வாமியிடம் பக்தியாக இருப்பதே எல்லாவற்றையும் விடப் பெரிய பரோபகாரமாகிறது.

அவ்வப்போது பொறாமை, கோபம் எல்லாம் வரத்தான் செய்யும். சண்டைக்குப் போவோமா, சுவரில் இட்டு எழுதுவோமா என்று தோன்றும். ஆனால் இதுகளில் புத்தி போனால் படிப்புக் கெட்டுப் போகும். நல்ல பெயரும் எடுக்க முடியாது. இதற்காகத்தான் தினமும் எழுந்தவுடனும், இரவு தூங்கும் முன்பும் ஸ்வாமியைப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நம்மை உருட்டித் தள்ளுகிற மாதிரி பெரிய காற்று அடித்தால் தூணைப் போய்ப் பிடித்துக் கொள்கிறோமல்லவா? அதே மாதிரி கோபம், பொறாமை, முதலிய கெட்ட குணங்கள் நம்மைத் தாக்குகிறபோது அம்மையப்பனாக இருக்கிற ஸ்வாமியைப் பிடித்துக் கொள்ள வேண்டும். நாம் விழாமல் அவர் காப்பார்.

அதனால் இன்றிலிருந்து தினமும் இரண்டு வேளை ஐந்து ஐந்து நிமிஷம் ஸ்வாமியை அம்மையப்பனாக நினைத்துப் பிரார்த்தனை பண்ணுங்கள். ''நான் கெட்ட வழி போகக் கூடாது; எனக்கு நல்ல புத்தி தா'' என்று அன்போடு சந்தோஷமாகப் பிரார்த்தனை பண்ணுங்கள். இதனால் நல்ல மனம், உறுதியான புத்தி, படிப்பிலே பாஸ், பிறகு உயர்ந்த உத்தியோகம், பிறர் எல்லாருக்கும் உபகாரமான நல்ல வாழ்க்கை எல்லாம் உங்களுக்கு ஏற்படட்டும்.

பார்வதி என்று ஒரு தாயாரைச் சொன்னேன். அவளுக்குப் பதி, கண

வர் பரமசிவன். 'பார்வதிபதி' என்கிற அவரே உலகுக்கெல்லாம் தகப்பனார். பெரிய தெய்வமானதால் அவருக்கு 'மஹாதேவன்' என்றும் பெயர். உங்களைப் போல் ஒரு குழந்தை அவரை ''ஹர ஹர'' என்ற பெயரைச் சொல்லி ஓயாமல் வழிபட்டு வந்தது. அந்தக் குழந்தைக்கு ஞானசம்பந்தர் என்று பெயர். இந்தக் குழந்தை ஊர் ஊராக ஹர ஹர என்று சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்து எல்லா ஜனங்களும் 'அரோஹரா' என்று கோஷம் போட்டார்கள். அந்தக் காலத்தில் உலகத்தில் இருந்த கெட்டதெல்லாம் அந்தக் கோஷத்தில் ஓடிப் போய்விட்டது. வையம் (உலகம்) துயர் தீர்ந்தது (கஷ்டமே இல்லாமல் ஆயிற்று). ''என்றைக்கும் இதே மாதிரி ஹர ஹர சப்தம் எழும்பிக் கொண்டே இருக்கட்டும்; அதனால் உலகத்தின் கஷ்டங்கள் எல்லாம் போகட்டும்'' என்று சம்பந்தக் குழந்தை தேவாரம் பாடிற்று.

அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்கவே

அரன் என்றால் ஹரன். ஹரன் என்றால் சிவன்.

இப்போது நான் ''நம: பார்வதி பதயே!'' என்று சொல்வேன். உடனே நீங்கள் அம்மையான பார்வதியையும் அவள் பதியான நம் அப்பா பரமசிவனையும் நினைத்துக் கொண்டு அன்றைக்கு அந்தக் குழந்தை சொன்ன மாதிரியே பக்தியோடு ''ஹர ஹர மஹாதேவா'' என்று சொல்ல வேண்டும்.

நம: பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவா

முதல் பக்கத்துப் படங்களுக்கான விளக்கம்

1. கொரியா தேசத்தில் காணப்படும் புத்த சமயத்தைச் சேர்ந்த மைத்ரேயரின் சிலைகளில் இதுவும் ஒன்று. நான்காம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து கொரியா நாட்டில் புத்த மதம் பரவியது. உண்மையான பக்தர்களை இவ்வுலக பந்தங்களிலிருந்து விடுவித்து சுவர்க்கத்துக்கு அழைத்துப் போகப் புத்தர் பிற்காலத்தில் மைத்ரேயராக அவதரிப்பார் என்பது மஹாயானப் பிரிவைச் சேர்ந்த பக்தர்களின் நம்பிக்கை. கொரியர்களின் இஷ்ட தெய்வமான மைத்ரேயருக்குக் கொரியப் பகோடாக்களில் (கோயில்) இம்மாதிரியான அற்புதமான சிலைகள் காணப்படுகின்றன.

2. கத்தியின் பெயர் கட்டார் (Katar) மராத்தியர்கள் இதைப் பயன்படுத்தினர்.

3. மெக்ஸிகோ நாட்டின் புராதன அஸ்டெக் ((Aztecs) இனத்தவர்.

4. மல்யுத்தம் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திராவிட்டால் படித்தாவது இருப்பீர்களே. ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் உடல் பலத்தினால் மட்டும் ஒருவர் மற்றவரோடு போரிட்டு வெற்றி பெறுவதுதான் மல்யுத்த விளையாட்டு. ஒரு காலத்தில் பாரதத்தில் மன்னர்களின் அவையில் மல்லர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். மகாபாரதத்தின் கதாநாயகர்களுள் ஒருவரான பீமன் மற்போரில் வல்லவனாயிற்றே.

முதல் பக்கத்தில் ராட்சத உருவில் உள்ளவரின் பெயர் ஸோஷ்போ மோரே தாய்ஜீ ஷியோசாகி. பெயரைப் பார்த்தாலே ஜப்பானியர் என்று தெரியவில்லையா ? ஜப்பானியர்களின் தேசிய விளையாட்டு 'சுமோ' எனப்படும் மல்யுத்தம். 4.55 மீடர் குறுக்களவுள்ள வட்டமான அரங்கினுள் இரண்டு மல்யுத்த வீரர்கள் மோதுவர். ஒன்று எதிரியைக் கீழே வீழ்த்த வேண்டும் (முதுகுக்கு மண் காட்டுவது என்று சொல்வதில்லையா, அப்படி) அல்லது அரங்கிலிருந்து வெளியே உந்தித் தள்ள வேண்டும். சுமோவில் இரண்டுமே சுலபமல்ல. ஏனென்றால் போரிடும் இருவருமே ராட்சத பலமும் பருமனும் உடையவர்கள். படத்தில்



உள்ள ஷியோ ஸாகியின் எடை 150 கிலோ. மனித டாங்கி போல் உள்ள இவர் மல்யுத்தக் கழகத்திலேயே ரொம்பக் கனமான புள்ளி! இவர் எப்போதும் தமது அபாரமான சரீரத்தின் கனத்தைப் பயன்படுத்தி எதிரியை அரங்கிலிருந்து உந்தித் தள்ளி விடுவாராம்.

தேன்

மலர்தோறும் தேன்தேடும்
மணிவண்டே நீதான்
மகிழ்ந்துண்ணும் நறுந்தேனை
ஏன் மீந்து வைத்தாய் ?
சிலர்போலப் பொருள்யாவும்
விரையம் செய்து
சிலநாளில் கடன்தேடி
ஓடல் செய்யாய் !

சிறுதுளியே பெருவெள்ளம்
ஆதல் போலச்
சிறுதேனைப் பேரடையாய்
நிறைத்துச் சொட்டும்
நறுஞ்சுவையை உன்னுழைப்பால்
உண்டு வாழும்
உலகெல்லாம் மிகஉவந்து
புகழ்ந்து பேசும் !

சுறுசுறுப்பில் தேனீபோல்
ஒருவரில்லை
சுத்தசைவம் உன்போல
எவருமில்லை !
சிறுபணியில் மகிழ்கின்ற
சிறப்பைப் பார்த்தால்
''சிந்திக்கும் மனிதனுக்கு
நீ முன்னோடி !''

புலவர் சி. அரசப்பனார்



காட்சிகள்

காலைப் பசுங்கதிரோன்
மேலைத் திசையடைந்து
வேலை முடிந்ததென
மறையும் — எழில் விரியும்

சிட்டுக் குருவியது
பட்டுச் சிறகுகளை
மொட்டு மலர்ந்ததென
விரிக்கும் — விண்ணில் பறக்கும்

மஞ்சு பொழியுமழை
நெஞ்சு விழைநதியாய்ப்
பஞ்சம் பறந்ததெனப்
பாயும் — நிலம் தோயும்!

சின்னஞ்சிறு கன்று
அன்னை பசுகண்டு
தன்னை மறந்ததெனத்
துள்ளும் — நெஞ்சை அள்ளும்

கண்ணைக் கவர்வதுவும்
எண்ணம் பதிவதுவும்
வண்ணம் நிறைந்தபல
காட்சி — இயற்கை மாட்சி.

வே. குணசேகரன்



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

குல நலம் குண நலத்தைக் காட்டும். இழிகுலத்திலே பிறந்தவனுக்கு உயர் குணம் ஒருபோதும் உண்டாகாது.

ஒரு காட்டில் ''சாந்தானந்தர்'' என்ற ஒரு தபோதனர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அக் காட்டில் உள்ள சகல விலங்குகளும் அவரிடம் குழந்தைகள் தகப்பனாரிடம் வந்து மரியாதை காட்டுவது போல் தினம் காலையில் வந்து வணங்கி விட்டுப் போகும்.

அம் முனிவரிடம் யானையும் வரும்; பூனையும் வரும்; எலியும் வரும், புலியும் வரும். நரியும் வரும்; பரியும் வரும். வண்டும் வரும்; நண்டும் வரும்.

ஒரு பலவீனமான நாய். அதன் உடம்பில் பல புண்கள். அச் சொறி நாய் அம் முனிவரிடமே வளைந்து வளைந்து சுற்றிக் கொண்டிருக்கும்.

ஒருநாள் இந்த நாயைக் கொல்ல ஓர் ஓநாய் வந்தது. சொறி நாய் நடுங்கி ஒடுங்கி முனிவரைத் தஞ்சம் புகுந்தது. முனிவர் பெருமான் கமண்டல நீரைத் தெளித்து, ''நீயும் ஓநாயாக ஆகக் கடவது'' என்றார். உடனே சொறி நாய் ஓநாயாக மாறியது. இந்த ஓநாய் வந்த ஓநாயை விரட்டி விட்டது.

மற்றொரு நாள் இந்த ஓநாயைக் கொல்லச் சிறுத்தைப் புலி வந்தது. ஓநாய் முனிவரைத் தஞ்சம் புகுந்தது. முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதைச் சிறுத்தைப் புலியாக மாற்றி விட்டார். இச் சிறுத்தை அச் சிறுத்தையை விரட்டி விட்டது. பின்னர் அது சிறுத்தைப் புலியாகவே கம்பீரமாகக் காட்டில் உலாவியது.

ஒரு நாள் சிறுத்தைப் புலியை ஒரு யானை கொல்ல வந்தது. சிறுத்தை முனிவரைத் தஞ்சம் புகுந்தது. கருணை நிறைந்த முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதனை யானையாக மாற்றி விட்டார்.

வேறொரு நாள் இந்த யானையைக் கொல்ல வேங்கைப் புலி பாய்ந்து வந்தது. யானை முனிவரிடம் அடைக்கலம் புகுந்தது. உடனே தவசிலர் அதனை வேங்கைப்புலியாக மாற்றி விட்டார். அது வேங்கையாக உலாவியது.

இன்னும் ஒருநாள் இந்த வேங்கையைக் கொல்லச் சிங்கம் வந்தது. வேங்கை முனிவரைத் தஞ்சம் புகுந்தது. முனிவர் அதனைச் சிங்கமாகச் செய்து விட்டார். வந்த சிங்கத்தை இந்தச் சிங்கம் விரட்டி விட்டது.

புதிய சிங்கம் அக்காடு முழுவதும் உலாவியது. மிருக ராஜாவான சிங்கம் அக்காட்டில் பெருமிதமாக வாழ்ந்தது.

ஒருநாள் அது தனக்குள் சிந்தித்தது. 'முனிவர் கருணை மிகுந்தவர். சொறி நாயாகிய நம்மை மிருக வேந்தனாகச் செய்தார். ஒருவேளை அவர் என்னைப் பழையபடி நாயாகச் செய்தாலும் செய்யக்கூடும். அவரிடம் கமண்டல நீர் இருக்கின்றது. அன்றி வேறு சிறிய பிராணியைக் கருணையினால் சிங்கமாகவும் செய்யக்கூடும். நான் என்றும் சிங்கமாக இருக்க வேண்டுமாயின் முனிவர் இருக்கக்கூடாது. ஆதலால் அவரைக் கொன்று தின்றுவிட வேண்டும்' என்று முடிவு செய்தது.

முனிவர் கண்மூடி நிஷ்டையில் இருக்கும்போது அசிங்கமுள்ள அச் சிங்கம் அவரைக் கொல்லப் பின்புறமாக வந்தது.

எல்லாம் அறிந்த அம் மாதவ முனிவர் புன்னகை செய்து, ''நீ இப்படி ஆனாயே, வாநாயே'' என்றார். அந்த விநாடியே அது சொறி நாயாக ஆகிவிட்டது.

முனிவர் ''நாயே உன் மீது பிழையில்லை. உன்னை உயர் பதவியில் வைத்த என் மீது பிழை. குலத்தளவு தானே குணம்? இழிந்தவனை உயர் பதவியில் வைத்தால் இழிந்த புத்திதானேயிருக்கும்'' என்றார். நாய் தன் அறிவின்மையை நினைந்து துயரமுற்றது.







மண்டு ராட்சதன்

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு மஹம்மூத் என்ற ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் ரொம்பவும் நோஞ்சானாக இருந்தாலும் அவன் மண்டையில் கொஞ்சம் மசாலா இருந்தது. அவனும் அவன் மனைவியும் ஏழைமையில் தவித்தார்கள். அவர்களிடம் ஒரு மந்தை ஆடுகளிருந்தன. ஒவ்வொரு நாள் காலையிலும் மஹம்மூத் ஆடுகளை மேய்க்க அழைத்துச் செல்வான். அவனிடம் ஒரு ஜாடியில் ஆட்டுப் பால் கொடுத்து அனுப்புவாள் அவன் மனைவி. காட்டில் உள்ள நரி ஒன்று குறுக்கே வந்து தன் வாலால் ஜாடியை உருட்டித் தள்ளிவிட்டு, ஜாடியிலுள்ள பாலைத் தீர்த்துக் கட்டி விட்டுப் போகும். இது போதாதென்று ஓநாய் ஒன்றும் தினந்தோறும் பிரசன்னமாகி, ஓர் ஆட்டை விழுங்கிச் செல்லும்.

மஹம்மூதுக்கும் அவன் மனைவிக்கும் மந்தையில் முப்பது ஆடுகள் இருந்தன. ஆனால் விரைவிலேயே மந்தையில் ஆடுகள் பதினைந்தாகக் குறைந்து விட்டன. மஹம்மூது மேலும் எலும்பும் தோலுமாக ஆகி விட்டான். பிச்சைக்காரன் குடியில் சனீசுவரன் புகுந்தது போல் இந்தத் தொல்லையோடு அருகிலுள்ள மலையிலிருந்து ராட்சதன் ஒருவனும் வந்து சேர்ந்து கொண்டான்.

ராட்சதன் மஹம்மூதைப் பார்த்து, ''உன்னுடைய எல்லா ஆடுகளையும் கொடுத்து விடு!'' என்று உறுமினான்.

மஹம்மூதுக்கு மண்டையில் கொஞ்சம் மசாலா அரைப்பது போல் இருந்தது. ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாக, ''நான் கொடுக்க முடியாது!'' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டான்.

ராட்சதனுக்கு உடம்புதான் பெரிசே தவிர கொசு மூளைதான். எனவே, ''சரி! அப்படியானால் நம் பலத்தைச் சோதித்துப் பார்ப்போம். யார் ஜயிக்கிறார்களோ, அவர்களுக்கு இந்த ஆடுகள் சொந்தம்!'' என்றான் மஹம்மூதிடம்.

''ஆகட்டும்!'' என்று தலையசைத்தான் மஹம்மூத்.

''முதலில் இருவரும் ஆளுக்கொரு மலையைத் தகர்ப்போம்! நான் தென் மலையைத் தகர்க்கிறேன். நீ வடமலையைப் பதம் பார்!'' என்றான் ராட்சதன்.

மறுநாள் ராட்சதன் இரு தெற்கத்திய மலைகளை கைக்கு ஒன்றாக அப்



படியே பெயர்த்தெடுத்து ஒன்றோடு ஒன்றை மோதி அப்பளம் நொறுக்குவது போல் நொறுக்கினான். மலைகள் பொடிப் பொடியாகித் தரையில் மண்ணைக் கொட்டின.

இப்பொழுது மஹம்மூத் பலத்தைக் காட்ட வேண்டிய தருணம். வடமலையின் உச்சிக்குப் போய் அதன் நுனியை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ராட்சதனைப் பார்த்து விழி பிதுங்கத் திரும்பினான்.

''ஏன் உன்னால் அசைக்க முடியவில்லையா?'' என்று கேலியாகக் கேட்டான் அந்த மந்தபுத்தி ராட்சதன்.




''இந்த மலை பூமியின் நடு மத்தியில் வீற்றிருக்கிறது. நான் இந்த மலையை அசைத்தால் பூமி முழுதும் பொடிப் பொடியாகிப் போகுமே என்று பார்க்கிறேன்.''

ராட்சதனுக்கே இதைக் கேட்டதும் கொஞ்சம் வேர்த்துத்தான் கொட்டியது.

''ஆ! நல்ல காலம். முதலிலேயே இதைச் சொன்னாயே! மஹம்மூத்! அந்த மலையைத் தொடாதே. இந்தத் தடவை நீ என்னைத் தோற்கடித்ததாக ஒப்புக்கொள்கிறேன்! நாளை இந்தக் காட்டில் உள்ள எல்லா மரங்களையும் அழிக்கலாம். நான் கிழக்குச் சரிவிலுள்ள மரங்களைப் பெயர்த்துக் குவிக்கிறேன். எந்த மரமும் பாக்கி இருக்காது. பிறகு நாம் உணவு சமைக்க முடியாது. பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்! அதற்காகத்தான் யோசிக்கிறேன்!''

''அதுவும் சரிதான். அப்படியானால் அந்த மரங்கள் அப்படியே இருக்கட்டும். அதைத் தொடாதே. மறுபடியும் நான் தோற்றதாக ஒப்புக்கொள்கிறேன். நாளை நாம் இருவரும் பூமியை ஓங்கி மிதிப்போம். யார் பூமியைப் பெரிதாகப் பிளக்க வைக்கிறார்களோ, அவரே வெற்றி பெற்றவர்!''

அவர்கள் இருவரும் பிரிந்து சென்றார்கள். மஹம்மூத் வீடு வந்ததும் தன் மனைவியிடம் சொன்னான்:





குண்டுமணி

நீ வடக்குப் பக்கம் போய்க் காரியத்தில் இறங்கு!'' என்றான்.

மஹம்மூத் இதற்கும் இசைந்தான். அவனுக்கு இன்னும் கொஞ்சம் நம்பிக்கை வளர்ந்தது. ராட்சதன் பலசாலியே தவிர, அறிவுக்கும் அவனுக்கும் வெகு தூரம் என்பதை உறுதி செய்து கொண்டான்.

அடுத்த நாள் மஹம்மூத் மரங்களைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருப்பது போலப் பாசாங்கு செய்து கொண்டிருந்தான். கிழக்குச் சரிவு மரங்களைப் பிடுங்கிப் போட்டுவிட்டு வந்தான் ராட்சதன்.

''நீ என்ன நெருக்கமாக அமர்ந்து பார்க்கிறாய்?'' என்று கேட்டான் மஹம்மூதை.

''இது மரங்களின் ஆணி வேர்! இங்குள்ள மரங்களைப் பிடுங்கப் போய்ப் பூமியில் உள்ள எல்லா மரங்களும் அழிந்து போனால் பிறகு விறகுக்கு

''ஒரு தோல் பையில் ஆட்டுப் பாலைக் கெட்டியாய்க் காய்ச்சிப் போட்டுத் தா!'' என்றான் மஹம்மூத்.

அவன் மனைவியும் சொன்னபடியே செய்தாள். அதிகாலையில் மஹம்மூத் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்தப் பால் பையைப் புதைத்தான். பிறகு அந்தராட்சதனுக்காகக்காத்திருந்தான்.

''யார் ரொம்பப் பலசாலியோ அவர்கள்தான் முதலில் போட்டியை ஆரம்பிக்க வேண்டும்!'' என்றான் மஹம்மூத். ராட்சதன் தான்தான் பலசாலி என்று சொல்லிக் கொண்டு சற்றுத் தள்ளிப்போய்த் தரையை ஓங்கி மிதித்தான்.

உதைத்த உதையில் பெரிய பள்ளம் உண்டாகி அவனே பூமிக்குள் இடுப்பளவு போய் விட்டான். மஹம்மூத் என்னதான் கொஞ்சம் புத்திசாலியானாலும் ராட்சதன் உதைத்த வேகத்தில் அவனுக்கு உடம்பு வெட வெடவென்று

நடுங்கிப் போயிற்று. இருந்தாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனை செய்வது போல் இருந்தான். ராட்சதனுக்குக் கொஞ்சம் சந்தேகம் பிறந்தது. இந்தச் சோனி தன்னை டபாய்க்கிறானோ என்று, ''என்ன விழிக்கிறாய்?'' என்றான் மஹம்மூதைப் பார்த்து.

''ஒன்றுமில்லை. நீ உதைத்துப் பள்ளம்தான் ஏற்பட்டது. நான் உதைத்தால் பூமிக்கு மூளையே சிதறிப் போய் விடுமே என்று யோசிக்கிறேன்'' என்றான் மஹம்மூத்.

''ஓஹோ! இனமும் ஏதாவது காரணம் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? இன்று உன் ஜபம் என்னிடம் சாயாது. தெரிந்து கொள்! நீ நிசமான பலசாலியானால் பூமியை உதைத்துக் காட்டு, பார்க்கிறேன்!'' என்று கொக்கரித்தான். மஹம்மூதும் தான் தயார் செய்து வைத்திருந்த இடத்தில் ஓங்கி உதைத்தான். உடனே அந்தச் சாக்குப்பை பிளந்து கெட்டியான ஆட்டுப்பால் நாலா பக்கமும் தெறித்து விழுந்தது.

அதைப் பார்த்ததும் அந்த மண்டு ராட்சதனுக்குத் தன் மூளையே சிதறிப் போனது போல் ஆகிவிட்டது. ராட்சதன் மீண்டும் தன் தோல்வியை அழமாட்டாக் குறையாக ஒப்புக் கொண்டான்.

அடுத்த நாள் மஹம்மூத் தானே வலிய ராட்சதனிடம் போனான். மஹம்மூதுக்குத்தானே வரிந்து பெரிய விருந்துபசாரம் செய்து கட்டிலில் படுக்க வைத்தான் ராட்சதன். தன்னைத் தூங்கும்போது கொல்வதற்கு ராட்சதன் திட்டமிட்டிருப்பது மஹம்மூதுக்கு விளங்கிவிட்டது. ராட்சதன் சற்று அசந்திருந்த போது உடனே தான் படுத்திருந்த இடத்தில் ஒரு பெரிய மரத்துண்டைக் கிடத்திவிட்டு மறைந்து கொண்டான். ராட்சதன் ஒரு பெரிய குண்டாந்தடியினால் மஹம்மூத் படுத்திருந்த படுக்கையில் ஓங்கி அடித்தான். 'ஒழிந்தான் பொடியன்!' என்று அட்டகாசமாகச் சிரித்து மகிழ்ந்தான் ராட்சதன். பிறகு ராட்சதன் படுத்து நன்றாகத் தூங்கிப் போனான்.

ரொம்ப நேரம் கழித்து மஹம்மூத் அந்த மரக்கட்டையை அகற்றிவிட்டுத் தானே படுக்கையில் படுத்துக் கொண்டான். அதிகாலையில் ராட்சதன் எழுந்ததும் பக்கத்தில் உயிரோடு மஹம்மூத் கொட்டாவி விட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

''நீ எப்படித் தூங்கினாய்? கனவு ஏதாவது கண்டாயா?'' என்று ராட்சதன் கேட்டான்.

''நான் நன்றாகத் தூங்கினேன். எந்தக் கனவும் கிடையாது. ஆனால் இரவில் ஒரு கொசுவோ ஈயோ கடித்த மாதிரி இருந்தது!''

மஹம்மூதின் பதில் ராட்சதனைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

'இனிமேல் இவன் பக்கத்தில் இருந்தால் நமக்கு ஆபத்து!' என்று உணர்ந்து ஓட்டம் பிடித்தான் ராட்சதன்.

இப்படித் தலைகால் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்த ராட்சதன், வழியில் நமது கதையில் முதலில் வந்த நரியையும் ஓநாயையும் சந்தித்தான்.

''நீ எதற்காக இப்படி விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறாய்?'' என்று அவைகள் வினவின.

''இந்தக் காட்டிலேயே மஹம்மூத் என்று ஒரு மகா பலசாலி இருக்கிறான். அவனுக்குப் பயந்து கொண்டுதான் ஓடுகிறேன்!'' என்றான் ராட்சதன்.

நரியும் ஓநாயும் விழுந்து விழுந்து சிரித்தன. ''மஹம்மூதாவது பலசாலியாவது! நான் என் வாலினாலேயே அவனைக் கீழே உருட்டித் தள்ளியிருக்கிறேனே!'' என்றது நரி.

''நான் அவனது ஆடுகளை அவன் பக்கத்தில் இருக்கும்போதே விழுங்கியிருக்கிறேன்!'' என்றது ஓநாய்.

''இருக்கவே முடியாது!'' என்று அவநம்பிக்கையில் கூறினான் ராட்சதன்.

நரியும் ஓநாயும் ராட்சதனை ஒருவாறு சமாதானப்படுத்தி ஆளுக்கொரு பக்கம் துணையாக இருந்து அழைத்துக் கொண்டு மஹம்மூதைக் காணப் புறப்பட்டன. எதிரிலே மஹம்மூதும் வந்து விட்டான்.

''பலே தோழர்களே! ஓடிப் போன அந்த ராட்சதனை எனக்காகப் பிடித்துக் கொண்டு வந்து விட்டீர்களே! நன்றி'' என்றான் மஹம்மூத்.


இது காதில் விழுந்ததோ இல்லையோ, உடனே அந்த ராட்சதன் தனக்குத் துரோகம் செய்த அவ்விரு மிருகங்களையும் ஒரே அடியில் சாய்த்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடியே போனான்.

ஒரு ராட்சதனாகிய தான் மஹம்மூதுக்குப் பயந்து கொண்டு இனி வாழ்வதை விடச் செத்துப்போவதே மேல் என்று தோன்றியது! ஆகவே ஒரு மலை முடியிலிருந்து கீழேவிழுந்து செத்தும்போனான்.

மஹம்மூத் தன் எதிரிகளை வென்ற கதை இதுதான்.


மக்கள் சொல்வது பொய்யல்ல. ''பலசாலி ஒரே ஒரு தரம்தான் ஜயிக்க முடியும். அறிவாளியோ ஆயிரம் தடவை ஜெயம் பெறுவான்!''


மூளைக்கு வேலை




மேலே எண்களால் ஆன நான்கு முகங்கள் இருக்கின்றன. இவைகளில் மூன்று சகோதரர்கள். ஒன்று மட்டும் தனி. அதாவது மூன்று முகங்கள் ஏதோ ஒரு வகையில் ஒன்று பட்டிருக்கின்றன. ஒன்று வேறுபட்டுள்ளது. வேறுபட்டுள்ள முகம் எது ?

விடை : A, C, D யிலுள்ள கூட்டுத் தொகை 12. Bயின் கூட்டுத் தொகை 14.





மீனு, ஜானு என்ற எலிக் குஞ்சுகள் ஒரு கேக்குத்துண்டை பார்த்தன. நான்தான் முதலில் பார்த்தேன். ஆகவே எனக்குத்தான் சொந்தம் என்று இரண்டுமே சண்டை விட்டுக் கொண்டாலும் முடிவில் கேக்கை அடைந்தது என்னவோ ஒன்றுதான். அது மீனுவா, ஜானுவா ?



இங்கு உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒரு மிருகம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அது என்ன மிருகம் என்பதை அறிய எண்கள் 1லிருந்து 61 வரை புள்ளிகளை ஒன்று சேர்த்துப் பாருங்கள்.

அராபியர்களும் மருத்துவமும்


இயேசு பிரான் தம் வாழ்நாளில் கணக்கற்ற நோயாளிகளைக் குணப்படுத்தி யிருப்பதாகப் படிக்கிறோம். ஆகவேதான் கிறிஸ்துவ தேவாலயங்கள் நோயாளிகளைப் பராமரிப்பதில் முக்கிய கவனமும் அக்கறையும் கொண்டிருந்தன. ஆறும் நூற்றாண்டில் இத்தாலியிலுள்ள மாண்டி காஸினோவில் ஸெயிண்ட் பெனடிக்ட் என்பவர் புகழ் பெற்ற தமது மடாலயத்தை நிறுவிய போது இப்படிச் சொன்னார்: ''நோயாளிகளைப் பராமரிப்பதுதான் மற்ற எல்லாவற்றையும்விட முதலாகவும் தலையாயதாகவும் இருக்க வேண்டும்.''

கி. பி. 476ல் ரோமானிய சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்தது. அத்துடன் புராதன கிரேக்க ரோமானியர்களின் காலத்தில் அறிவை வளர்த்துக் கொள்ளுவதற்கு இருந்த ஆர்வமும் நசிக்கலாயிற்று. அதிலிருந்து பதினாறும் நூற்றாண்டு வரை மருத்துவத் துறையின் வளர்ச்சியும் மற்ற நுண் கலைகளின் வளர்ச்சியும் படுமோசமாக உதாசீனப் படுத்தப்பட்டன. கிறிஸ்துவப் பாதிரிமார்களும், அராபிய மருத்துவர்களும் மட்டும் இல்லையானால் புகழ்மிக்க கிரேக்க ரோமானிய மருத்துவர்களின் உபதேசங்கள் மறைந்து அழிந்தே போயிருக்கும். அதிர்ஷ்டவசமாகக் கிறிஸ்துவ மடாலயங்களும், அராபிய மருத்துவர்களும் புராதன மருத்துவத் துறையின் செயல் முறைகளைக் கையாண்டதோடு இவ்விரு சாராரும் தத்தமக்கே உரிய முறைகளில் அதில் பல முன்னேற்றங்களையும் அவ்வப்போது செய்து புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். இம்முறையில் பண்டைய அறிவாளிகளின் கருத்துக்கள் பாதுகாக்கப் பட்டன. பிற்காலத்தில் உருவான மருத்துவக் கல்லூரிகளுக்கு இது அஸ்திவாரமாக அமைந்தது.

சாந்தியும் அமைதியும் நிறைந்த சூழலில் மடாலயங்களில் கிறிஸ்துவத் துறவிகளுக்குப் புராதன மருத்துவக் கலை நூல்களைப் பயிலவும், பிரதி எடுக்கவும் நல்ல வாய்ப்புக்கள் இருந்தன. இம்மாதிரித் தொண்டினால் கிறிஸ்துவத் துறவிகள் புதுமைகளை அதிக அளவில் உண்டாக்காவிட்டாலும் புராதன அறிவுப் பொக்கிஷத்தை அவர்களால் பாதுகாக்க முடிந்தது.

ஒவ்வொரு மடாலயத்தினுள்ளும் சின்னஞ் சிறு வைத்திய சாலைகள் இருந்தன. மடாலயத்தின் தோட்டத்தில் மூலிகைகளைப் பயிராக்கி நோயாளிகளுக்கு மூலிகை வைத்தியம் செய்வித்தார்கள். அக்காலப் பாதிரியார்களுக்குப் பொதுவாக விஞ்ஞான மருந்துகளில் அதிக நம்பிக்கை கிடையாது. நோய்களுக்கு முழுமையான குணம் ஏற்பட வேண்டுமானால், பிரார்த்தனை, உபவாசம், உடலை வருத்திக் கொள்ளல் ஆகியவையே சிறந்ததெனக் கருதப் பட்டது.

இன்றுள்ள பல பெரிய மருத்துவ மனைகள் இந்தக் கால கட்டத்தில் அன்று மடாலயங்களின் தர்ம வைத்தியசாலைகளாகத் தோன்றியவை தான். லண்டனில் உள்ள செயின்ட் பார்த்த



அம்மை நோயாளியுடன் ராஸஸ்

லோமியோ வைத்தியசாலே பன்னிரண்டாம் நூற்ருண்டில் ஒரு கிறிஸ்துவத் துறவியிஞல் உருவாக்கப்பட்டதாகும். மடாலய மருத்துவமனேகள் நோயாளிகளிடம் கருணே காட்டிச் சிகிச்சை செய்தாலும் விஞ்ஞான ரீதியான ஆய்வோ மருந்துகளோ கிடையாது. அமரராகிவிட்ட புனிதர்களின் மீது நம்பிக்கை, பக்தி இவற்றின் அடிப்படையிலேயே சிகிச்சை முறைகள் இருந்தன. உதாரணமாக ஒரு நோயாளிக்கு நாக்கு வீங்கிப் போயிருக்குமாஞல் அவனே ஒரு குறிப்பிட்ட கிறிஸ்துவத் துறவியின் சமாதியைச் சுற்றிப் போடப்பட்டுள்ள இரும்பு வேலியைத் தன் நோய்ப்பட்ட நாக்கிஞல் சுவைக்குமாறு சொல்லுவார்கள்!

தொழுநோய் சர்வ சாதாரணம். ஆஞல் அது பிறரைத் தொற்றிக் கொள்ளும் என்ற பயம் இருந்தது. மற்றவர்களிடமிருந்து தொழு நோய்க்காரர்கள் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டார்கள். தொழு நோய்க்காரர்கள் தங்கள் வருகையை மற்றவர்களுக்கு அறிவிக்க எப்போதும் தங்களுடன் ஒரு மணியைச் சுமந்து சென்றனர். அந்த மணி ஓசை மற்றவர்களே அவர்களிடமிருந்து விலகியோடச் செய்யும்.

சில இடங்களில் தொழுநோய்க்காரர்கள் தங்கள் உடலேயும் முகத்தையும் முழுமையாக, பிறர் பார்வைக்கு இலக்காகா வண்ணம் மூடி மறைத்துக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இத்தகைய தொழு நோயாளிகளேச் சவப் பெட்டியினுள் படுக்கச் செய்து அவர்கள் மீது பாதிரியார் மண்ணேத் தூவுவார். இந்தச் செயலிஞல் சட்டப்படி அவர் இறந்துவிட்டதாகக் கருதப்படும். அதன் பிறகு அந்த நோயாளிக்கும் உயிரோடு உள்ளவர்களுக்கும் எவ்விதத் தொடர்புமிருக்காது. பிற்காலத்தில் தொழுநோய்க் காரர்களுக்கென்று இல்லங்கள் நிறுவப்பட்டன. அங்கு இவர்களுக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டது.

ஏழாம் நூற்ருண்டில், மத்திய தரைக் கடலுக்குக் கிழக்கேயுள்ள நாடுகளிலும் வடக்கு ஆப்பிரிக்கா, ஸ்பெயின் தேசத்தின் முழுப் பகுதியிலும் அராபியரின் ஆதிக்கம் வலுவடைந்தது. கிரேக்க வைத்தியர்களின் முடிவுகளேத் தங்கள் மொழியில் பெயர்த்துக் கொண்டார்கள். அவர்களாகவும் பல அரிய மருத்துவப் புதுமைகளேக் கண்டுபிடித்தார்கள்.

மருந்து ஆராய்ச்சி (Study of drug) எனப்படும் ஃபார்மகாலஜிக்கு (Pharmacology) அராபிய மருத்துவர்கள் பல புதிய மருந்துகளே அறிமுகப் படுத்தியுள்ளார்கள். பேதி மருந்தாகப் பயன்படுத்தும் சென்ஞ (Senna) எனப்படும் சூரத்து நிலாவிரை இலேயும் மயக்கம் தரும் ஓபியம் எனப்படும் அபினியும் அராபியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மருந்துகள். இன்றும் இவை புழக்கத்தில் உள்ளன. மருத்துவ உலகில் உலவும் 'ஆல்கலி', (காரம்) ஆல்கஹால் (சாராயம்) டிரக் (Drug) மயக்கமூட்டும் மருந்துச்சரக்கு — ஆகிய



துப்பாக்கிக் குண்டுக் காயத்துக்குக் கொடூரமான சிகிச்சை

வார்த்தைகள் அராபியர்கள் விட்டுச் சென்றவையே.

புகழ்பெற்ற அராபிய வைத்தியர்களில் ஒருவர் ராஸஸ் (*Rhazes*). ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த இவர் தட்டம்மைக்கும், பெரியம்மை (வைசூரி)க்கும் உள்ள வேறுபாட்டை விளக்கியவர்.

பாக்தாத் நகரில் ஒரு வைத்திய சாலை அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும்படி இவரிடம் கேட்டுக் கொண்டார்கள். இவர் என்ன செய்தார் தெரியுமா ? நகரின் பல பகுதிகளில் புதிய இறைச்சித் துண்டங்களைக் கட்டித் தொங்கவிடச் செய்தார். சில நாட்கள் கழித்து அவைகளைப் பரிசிலனை செய்து எந்த இடத்தில் உள்ள இறைச்சித் துண்டம் மிக அதிகமாகக் கெடாதிருந்ததோ, அங்கு மருத்துவ மனையை நிறுவச் செய்தார்.

அராபிய மருத்துவர்களில் புகழ் பெற்றவர் அவிஸென்னு (*Avicenne*) என்பவர். இவர் பாரசீக தேசத்தவர் (980–1037). நுரையீரலைத் தாக்கும் எலும்புருக்கி நோய் ஒரு தொத்து வியாதி என்று கண்டறிந்தவர் இவர் தான். மருத்துவ விதி (*Canon of - Medicine*) என்ற புகழ்பெற்ற நூலை எழுதினுர் இவர். இன்றும் இந்த ஒப்பரிய நூல் வழக்கில் உள்ளது.

முஸ்லிம் சாம்ராஜ்யங்கள் பதின்மூன்ரும் நூற்றுண்டில் க்ஷீணமடையும்வரை அராபிய மருத்துவம் புகழுடன் விளங்கியது. அதன் பிறகு மருத்துவத்தின் வருங் காலம் ஐரோப்பிய மருத்துவப் பள்ளிகளின் கைக்கு வந்தது. அராபிய கிரேக்க மருத்துவ முறைகள் லத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டுக் கிறிஸ்துவ உலகில் பரவலாயிற்று. பன்னிரண்டாம் நூற்றுண்டுவாக்கில் சர்வகலா சாலைகள் தோன்றி வளரலாயின. அறிவு, வளர்ச்சி அடையலாயிற்று. கிறிஸ்துவ அராபிய மதங்கள் மனித உடலைக் கூறு போட்டு ஆராய்வதை அனுமதிக்கவில்லை. இறந்த உடல்களைச் சிதைத்துப் பரிசோதிப்பதைப் பாவமாகக் கருதின. ஆனுல் மருத்துவர்களுக்கோ உடலினுள் அமைப்பு எப்படி இருக்கிறது என்பதை அறிந்தாக வேண்டியஅவசியம் இருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாகக் கிறிஸ்துவ மதத்தினரின் மனம் மாறலாயிற்று. பதினன்காம் நூற்றுண்டில் இத்தாலியில் உள்ள போலோக்னு சர்வகலாசாலையில் உடலை அறுத்துப் பரிசோதிக்க அனுமதிக்கப்பட்டது. ஒன்பதாம் நூற்றுண்டிலேயே ஐரோப்பாவில் மருத்துவப் பள்ளிகள் தோன்றலாயின. முதல் மருத்துவப் பள்ளி இத்தாலியில் உள்ள ஸாலர்னே என்ற நகரில்தான் ஏற்பட்டது. ஒரு கிரேக்கர், ஒரு யூதர், ஓர் அராபியர், ஒரு லத்தீன் மொழிக்காரர் — ஆகியோருடைய கூட்டுடன் இந்த முதல் மருத்துவப் பள்ளி தோன்றியதாக ஒரு கதை. எல்லா இனத்தவரும் எல்லா மதத்தினரும் இந்த மருத்துவப் பள்ளியில் அனுமதிக்கப்பட்டனர். அது மட்டுமல்ல; முதன் முறையாகப் பெண்களும் மருத்துவம் பயில அனுமதிக்கப்பட்டனர். நாளாவட்டத்தில் மருத்துவப் படிப்பில் தேர்வு முறை ஏற்பட்டது. பரீட்சைகள் கட்டாயமாயின. பரீட்சைகளில் வெற்றிகரமாகத் தேறியவர்களே வைத்தியத் தொழில் நடத்தவும் தங்களை வைத்தியர் என்று கூறிக் கொள்ளவும் தகுதி பெற்றனர்.

Black death என்றதொரு மர்மக் கொள்ளை நோய் ஐரோப்பாவில் பயங்கரமாகப் பரவியது. பத்தே ஆண்டுகளில் ஐரோப்பாவின் நான்கில் ஒரு பகுதி மக்கள் இந்த நோய்க்குப் பலியாஞர்கள். இந்த நோய் கண்டவர் பன்னிரண்டு மணி நேரத்தில் மரணத்தைத் தழுவினுர். மருத்துவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. எரி நட்சத்திரத்தின் வாலினுல் உலகில் விஷம் பரவிவிட்டதாகப் பலர் நம்பினுர்கள்.

இத்தகைய பெரிய அழிவிலும் அறிவை வளர்த்துக் கொள்ளும் வெறி மனிதனிடம் குறையவில்லை. பதினைந்தாம் நூற்றுண்டு முழுதும் வைத்திய மாணவர்களின் முன்னிலையில் மனித உடல்கள் அறுத்துச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஆனுலும் புதிய தகவல்கள் மிகக் குறைவாகவே கிடைத்தன. ஏனென்ருல் இந்த மனித உடலைக் கூறு போடுவது மருத்துவ உதவியாளர். விரிவுரையாளர் கிரேக்க மருத்துவர் கேலனின் புத்தகத்தின் படி விளக்கங்களைக் கூறுவார். கேலனின் புத்தகத்தில் உள்ள உடற்கூறு குறிப்புக்களும் மாணவர்கள் முன்னிலையில் வெட்டிக்

வெஸலியஸ்



காட்டப்படும் நிஜ உடலின் பாகங்களின் தோற்றமும் ஒத்து வராது. ஆகவே அந்த உடலை அதிதமான மனித உடல் என்று முடிவு கட்டுவார்கள்.

பதினாறாம் நூற்றாண்டில் பெல்ஜியம் தேசத்தைச் சேர்ந்த வெஸலியஸ் ***(Vesalius)*** என்பவர் பதுவா நகரின் மருத்துவக் கல்லூரியில் உடற்கூறு வல்லுனராக இருந்தார். ***(Professor of Anotomy)*** இவர் மனித உடல்களைத் தாமே கூறு போட்டுத் தாம் காண்பதைக் கொண்டு உரை நிகழ்த்தினார். இதற்காகக் கல்லறைகளிலிருந்து இறந்த உடல்களை வெஸலியஸ் தோண்டி எடுத்து வருவார்.

இவருக்குப் பிற்காலத்தில் அம்புரோஸ் பாரே ***(Ambroise Pare)*** என்ற பிரெஞ்சு ராணுவ டாக்டர் அறுவைச் சிகிச்சையில் பல முன்னேற்றங்களைத் தோற்றுவித்தார். அவர் காலத்தில் துப்பாக்கிக் குண்டினால் ஏற்பட்ட ரணங்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தேன் பாகை எண்ணெயுடன் கலந்து கொதிக்க வைத்து அந்தக் கலவையைக் காயத்தின் மீது ஊற்றுவது வழக்கம். அவதிக்குள்ளான மனிதன் இதை ஏற்கும்போது படும் வேதனை மிக மிகப் பரிதாபமாக இருக்கும். பாரே இத்தகைய பயங்கரமான கலவைக்குப் பதிலாக முட்டையின் கரு, ரோஜா எண்ணெய், டர்பைண்டைன் ஆகியவைகளைக் கொண்டு ஒரு களிம்பு தயாரித்து அதைப் போர்வீரர்களின் குண்டு பட்ட காயங்களுக்குப் பயன்படுத்தினார். பாராட்டத் தக்க பலன் இருந்தது. வேதனை வெகுவாகக் குறைந்தது.

உடலின் பகுதிகளை வெட்டி எடுக்கும்போது ஏற்படும் ரத்தப் பெருக்கை நிறுத்தச் சிவக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை ***(Cauters)*** வெட்டு வாயில் வைத்துச் சுடுவது வழக்கம். நோயாளி எப்படித் துடித்துப்போவான் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஆனால் அம்புரோஸ் பாரே தமனி ரத்தக் குழாய்களை இறுகக் கட்டிவிட்டுத் தம்முடைய கண்டுபிடிப்பான களிம்பைத் தடவி ரத்தச் சேதத்தைத் தவிர்த்தார். செயற்கை உடல்உறுப்புக்களைப் பொருத்தினார். அறுவைச் சிகிச்சைக்குப் பல புதிய கருவிகளை உருவாக்கினார்.

மத்திய காலத்தில் மருந்துகளைத் தயாரிப்பதில் மனிதனின் கவனம் வெகுவாக ஈடுபட்டிருந்தது. ஆரம்பத்தில் இது அராபியர்களின் ஆதிக்கத்தில் இருந்தாலும் பிற்காலத்தில் ஐரோப்பா முழுவதிலும் இத்துறையில் வல்ல கலைஞர்கள் பெருகினார்கள். இத்தகையோர் ரசாயன அற்புதங்களில் கவனம் செலுத்தினார்களேயொழிய வைத்திய முறைகளுக்கான வழிவகைகளை ஆராயவில்லை. இவர்கள் பெரும்பாலும் ஃபிலாஸபர்ஸ் ஸ்டோன் என்றதொரு கற்பனைக் கல்லைத் தேடியலைந்தார்கள். இந்தக் கல் உலோகங்களைத் தங்கமாக மாற்றும் என்று நம்பினார்கள். அது மட்டுமல்ல; அந்தக் கற்பனைப் பொருள் மனிதனுக்குச் சிரஞ்சீவித் தன்மையையும் எல்லா வியாதிகளையும் குணமாக்கும் அற்புதத்தையும் கொடுக்கக் கூடியது என்றும் கருதினார்கள்.


ரசவாதத்திலிருந்து நோய்களைத் தடுக்கவும் சிகிச்சை செய்யவும் இவர்கள் கவனம் பதினாறாம் நூற்றாண்டில்தான் திரும்பியது. ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த பாரா செல்ஸஸ் ***(Para celsus)*** என்ற மருத்துவர், விஞ்ஞான ரீதியாக எளிய பல பொருள்களிலிருந்து நோய்களைக் குணப்படுத்தும் பல மருந்துகளைத் தயாரித்தார். அவரது முறைகள் இன்றும் மருத்துவத் துறையில் கையாளப்பட்டு வருகின்றன.

நந்து சுந்து மந்து (5)

சித்திரம்: செல்லம்




சீக்கிரம், சீக்கிரம், இந்தப் பக்கமா ஓடி வாங்க.
ஐயையோ! சுந்து மூர்ச்சையாகி விழுந்துட்டாரே. என்ன செய்வேன்? என்னாலே நகர்த்தக் கூட முடியல்லியே.
நல்ல வேளை, என் மேல் தூக்கி நிறுத்தணும்னு உனக்குத் தோணிச்சே... ம்... யம்மாடி! இவன் தான் என்னமாக் கனக்கிறான்!
அட, ஏன் இப்படிக் காலேக் கட்டறே? ஐயோ சுந்துவுக்கு என்ன?
அந்தப் பயலே பார்த்தியா சுந்து? நான் உனக்குக் கட்டுக் கட்டறேனும். அதுவும் தனக்குப் பாண்டேஜ் கட்டிக்கிறது! இருந்தாலும் நம்ம மந்து ரொம்ப புத்திசாலி தான்.
தொடரும்



விநாயகர் அருள்

சாந்தபுரத்து விநாயகர் கோயில் வாசலில் எப்போதும் குடிகொண்டிருப்பவன், ஆண்டியப்பன். அவனுக்குப் பார்வை கொஞ்சம் மட்டு. அவன் சதா ''நமசிவாய, நமசிவாய'' என்று உச்சரித்துக் கொண்டே இருப்பான். யாராவது வருகிறாற்போல் இருந்தால் கொஞ்சம் உரக்கவே சொல்லுவான். ஏதோ அவன் மகளும் அவனும் ஜீவனம் நடத்தப் போதுமான வருவாய் வந்தது. அவனுடைய மகள் கமலா நல்ல சாமர்த்தியசாலி. எப்போதும் அவனுக்குத் துணைக்கு வருவாள்.

ஒரு நாள், ஆகாயத்தில் பார்வதியும் பரமசிவனும் உலா வந்து கொண்டிருந்தார்கள். பார்வதி தேவியின் பார்வை ஆண்டியப்பனின் மேல் விழுந்ததும் அவளுக்கு இரக்கம் பிறந்தது. உடனே இறைவனிடம் அவனுக்கு ஒரு வழிகாட்டி அருளுமாறு வேண்டினாள். இறைவனும் தலையசைத்தார். பிறகு இருவரும் பிள்ளையார் கோயிலுக்குத் தம் மகனைப் பார்த்துவிட்டுப் போக வந்தனர். அப்போது பரமசிவன், விநாயகரிடம், ''விநாயகா! உனது வாசலிலேயே தவம் கிடக்கும் இந்தப் பிச்சைக்காரனுக்கு ஒரு வழி காட்டுவாயாக'' என்றார். அப்போது விநாயகரும், ''ஆகா, இன்னும்பதினைந்துநாட்களுக்குள்இவனை லட்சாதிபதியாக்குகிறேன்'' என்றார்.

இந்தச் சம்பாஷணை அப்போது தான் கோயிலுக்கு அர்ச்சனை செய்ய வந்த உலோபி ஒருவன் காதில் விழுந்தது. அவன் பணக்காரனாயிருந்தாலும் அவனுக்குப் பேராசை அளவில்லாமல் இருந்தது. இந்த லட்சத்தை எப்படியும் அடைந்தே தீருவது என்று தீர்மானித்துக் கொண்டான். பிறகு அவன் வாயிலுக்கு வந்து, பிச்சைக்காரனிடம் மெதுவாகப் பேச்சைக் கொடுத்தான். ''ஆண்டியப்பா! உனக்குத் தினமும் என்ன கிடைக்கிறதோ அதை எனக்குக் கொடுத்துவிடு. உனக்கு நான் நூறு ரூபாய் கொடுக்கிறேன்'' என்றான். ஆண்டியப்பனுக்கு ஒரே ஆச்சரியமும், மகிழ்ச்சியும் மாறி மாறி வந்தன. இருந்தாலும் அவன் தன் மகளிடம் ஒரு வார்த்தை கேட்டு மறு நாள் கூறுவதாகச் சொன்னான். உலோபியும் சந்தோஷமாக வீடு திரும்பினான்.

விஷயத்தைத் தந்தையிடம் கேட்ட கமலா மிகவும் திகைப்படைந்தாள். பரம லோபியா நம்மிடம் இவ்வளவு கருணை காட்டுகிறான்! இதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று உணர்ந்த கமலா மறு நாள் தன் தந்தையுடன் கோயிலுக்குச் சென்றாள். அவள் கொஞ்சம் கொஞ்சமாகத் தொகையை உயர்த்தி இருபத்தைந்தாயிரத்துக்குக் கொண்டு வந்தாள். உலோபிக்குக் கொஞ்சம் வருத்தம்தான். இருந்தாலும் எழுபத்தையாயிரம் கையாகக் கிடைக்

குமே என்று சந்தோஷப்பட்டு, பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அன்று மாலை ஆண்டியப்பனுக்குக் கிடைத்த வருவாயை வாங்கிக் கொண்டு போனான்.

பதினைந்தாம் நாள். லோபி சுவரில் காதைப் பதித்து உள்ளே நடக்கும் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தான். பரமசிவன், ''விநாயகா! இன்னும் ஆண்டியப்பனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே!'' என்று குறை கூறினார். உடனே கணபதி, ''தந்தையே, இது வரை இருபத்தையாயிரம் ரூபாய் கிடைக்க வழி செய்துவிட்டேன். இனி மீதி எழுபத்தையாயிரம் ரூபாயும் கொடுத்தால்தான், இப்பொழுது நம் பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும் லோபியின் கையும் காதும் சுவரிலிருந்து விடுபடும்'' என்று கூறினார்.

லோபியின் கையும், காதும் என்ன முயன்றும் கோயில் சுவரிலிருந்து விடுபடவே இல்லை. எனவே, சத்தம் போட்டு வீட்டிலிருந்து மீதி எழுபத்தையாயிரம் ரூபாயையும் வரவழைத்து ஆண்டியப்பனிடம் கொடுத்தான். அதன் பிறகுதான் அவன் காதும் கையும் சுவரிலிருந்து விடுபட்டன. ஓடிப் போய் விநாயகர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அன்றிலிருந்து தன் கருமித்தனத்தை விட்டொழிந்தான். — **மதுரஸ் மணி**

தாய்ச் சேவை

அவன் ஓர் ஏழைச் சிறுவன். அவனுக்குத் தந்தையில்லை. தாய் மட்டும் இருந்தாள். இருவரும் ஒரு குடிசையில் குக்கிராமம் ஒன்றில் வசித்து வந்தனர். அந்தப் பையனிடம் ஒரு விநோதம். என்னவென்றால் அவனுக்கு மேல் வரிசைப் பற்களில் இரண்டு நீட்டிக் கொண்டிருந்தன. அது அசிங்கமாகத்தான் இருந்தது. ஆனாலும் என்ன செய்வது? தாயும் மகனும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஒரு நாள் மகனுக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தாள் அம்மா. அப்போது அவள் கண்களில் நீர் பெருகியது. அதைக் கண்ட மகன் தாயின் கண்ணீருக்குக் காரணம் கேட்டான். தாய், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு காரணம் சொல்லாது பேச்சை வேறு திசையில் திருப்ப முயற்சி செய்தாள். மகன் அதை உணர்ந்து கண்ணீரின் காரணத்தைச் சொல்லாவிட்டால் சாப்பிட மாட்டேன் என்று முரண்டு பிடித்தான். வேறு வழியின்றித் தாயும்காரணத்தைக்கூறினாள்.

''உன் பற்களைப் பற்றி ஜோசியர் ஒருவரிடம் சென்று கேட்டேன். இந்தப் பற்கள் தான் உன்னைப் பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக்கப் போகிறது என்றார். அப்போது நீ என்னை நினைத்துக் கொள்ளுவாயோ, மாட்டாயோ?' என்று எண்ணினேன். கண்ணீர் வந்து விட்டது'' என்றாள் தாய்.



மகன் உடனே எழுந்து வெளியே சென்றான். சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த மகனின் வாயிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நீட்டிக் கொண்டிருந்த இரு பற்களையும் காணவில்லை.

''அம்மா! உன்னை விட்டுப் பிரித்து விடும் அந்தப் பற்கள் எனக்குத் தேவையில்லை அம்மா. தாய்ச் சேவையே எனக்குப் பெரிது. சக்கரவர்த்தி பதவியல்ல. அதை நான் விரும்பவுமில்லை வேண்டாம், அம்மா, எனக்கு வேண்டாம்!'' என்று கூறினான். தன் பொருட்டுத் தன் பற்களைக் கல்லால் தட்டி உடைத்துக் கொண்டிருக்கிறான் தன் மகன் என்பதை அறிந்த தாய் அவனைக் கட்டிக் கொண்டு உச்சி முகர்ந்தாள். அந்தச் சிறுவன் யார்? வேறு யாருமல்ல. மௌரிய சாம்ராஜ்யத்தில் அரசியல் வல்லுநனாகத் திகழ்ந்த சாண **க்கியர்.**

— **தே**



செத்த காலேஜில் சில உயிருள்ள விஷயங்கள்

சென்னை மியூசியம் எப்போது தொடங்கப்பட்டது? ஆரம்பத்தில் அது எங்கு இருந்தது?

சென்னை மிருகக் காட்சி சாலையை உயிர்க் காலேஜ் என்றும், மியூஸியத்தைச் செத்த காலேஜ் என்றும் வேடிக்கையாகக் குறிப்பிடுவது வழக்கம்.

சென்னையில் மியூசியம் தொடங்கப்பட்டது 1851-ம் ஆண்டில்தான்! ஆரம்பத்தில் சில பறவைகள், கற்கள், மணல் வகைகளுடன் மட்டும் தொடங்கப்பட்ட இந்த மியூசியம் முதன் முதலில் தற்போது தமிழகக் கல்வி இலாகா இயக்குனர் அலுவலகம் இருக்கும் மெட்ராஸ் லிடரரி சொஸைட்டி'' கட்டிடத்தில் இருந்தது. சில வருடங்கள் கழித்து எழும்பூர் பாந்தியன் சாலைக்குக் குடி பெயர்ந்தது. இந்த மியூசியத்தைத் தொடங்கியவர் சர். எட்வர்ட் கிரீன் பால்ஃபர் என்ற ஆங்கிலேயரே! அவர் தம் ஞாபகார்த்தமாகச் சென்னையில் ஒரு தெருவும் இருக்கிறது தெரியுமோ?



தமிழ்நாட்டில் வேறு எங்காவது இம்மாதிரி மியூசியங்கள் இருக்கின்றனவா?

இருக்கின்றன. ஆனால் அவை சிறிய மியூசியங்களே.

புதுக்கோட்டையில் இரண்டாயிரம் காட்சிப் பொருட்களுடன் ஒரு மியூசியம் உள்ளது. தஞ்சை, திருச்சி,



அரியலூர், அறந்தாங்கி முதலிய பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருள்களும், பறவை இனங்களும் இங்கே உள்ளன.

இதைத் தவிர தஞ்சையில் பழைய அரண்மனையிலுள்ள ஸரஸ்வதி மஹாலில் ஓர் 'ஆர்ட் காலரி' இருக்கிறது. ஆனால் இங்கிருப்பது தொல்பொருள்களும் ஓவியங்களும் மட்டுமே!

மாநில மியூசியங்களில் சென்னை மியூசியம்தான் இந்தியாவிலே பெரியது என்பதும், நம் நாட்டிலேயே முதன் முதலில் தொடங்கப்பட்ட மியூசியம் இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.



சென்னை மியூசியத்தில் எத்தனை பிரிவுகள் உண்டு?

எட்டுப் பிரிவுகள்: அவை: தொல் பொருள், மானிடவியல், நாணயப் பிரிவு, விலங்கியல், தாவரவியல், புவியியல், குழந்தைகள் பிரிவு, ரசாயனப் பாதுகாப்பு, முதலியவையே அவை. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி கியூரேட்டர் எனப்படும் அதிகாரி இருக்கிறார்.

மியூசியத்துக்குப் பல்வேறு பொருட்களை அன்றாடம் சேகரித்தல், அவைகளைத் தகுந்தபடி பாதுகாப்பது, சிறந்த முறையில் காட்சிப் படுத்தி அமைப்பது, ஒவ்வொரு பொருளையும் பற்றித் தெளிவான குறிப்புக்கள் தயாரிப்பது அதை ஆராய்ச்சி செய்து புத்த



மன்னை செளமிராஜன்

கங்கள் எழுதுவது போன்ற பொறுப்புக்கள் கியூரேட்டரின் வேலையாகும்.

ஒரு காட்சிப் பொருளை — உதாரணமாக ஒரு பழைய விக்கிரகத்தை எதைக் கொண்டு அதன் வயதினையும், மேல் விவரங்களையும் கண்டு பிடிக்கிறார்கள்?

சில விக்கிரகங்களில் அது யாரால் எப்போது, எங்கு செய்யப்பட்டது— என்ற குறிப்புக்கள் வெட்டப்பட்டிருக்கும்

ஒரு விக்கிரகத்தில், உள்ள அடையாளங்கள், முத்திரைகள், முகம், ஆயுதங்கள், சிரிப்பு முதலியவற்றினைக் கொண்டும் அதன் வயதைக் கண்டு பிடிக்க முடியும். பல்லவர் காலத்திய விக்கிரகங்களின் கிரீடங்கள் உருளை வடிவில் உயரமாக இருக்கும். அக்காலத்து உலோகச் சிலைகளின் பூணூல் ரிப்பன் போல் பட்டையாகவும் இடது கையில் சாய்ந்திருப்பது போலவும் காணப்பட்டால் அது ஒன்பதாவது நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நிர்மாணிக்கப்படுகிறது. பூணூல் நூல் போல் மெல்லியதாகக் காணப்பட்டால் அது பல்லவர் காலத்துக்குப் பிறகு செய்யப்பட்ட விக்கிரகம் என்று முடிவெடுப்பார்கள். புராதனக் கோவில்கள் ஓலைச்சுவடிகள், கல்வெட்டுக்கள் முதலியவைகளை நன்கு ஆராய்ந்து குறிப்பிட்ட சிலை சேரர்களால், சோழர்களால் அல்லது பாண்டிய மன்னர்களால் செய்யப்பட்டது என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. கற்கள், பாறைகள் முதலியவற்றைப் பற்றிய விவரங்களை ரசாயன சோதனைகள் மூலம் கண்டு பிடிக்கிறார்கள்.


சிதைந்து போன அல்லது அழிந்து போன ஓவியங்களை எப்படிச் சீரமைக்க முடியும்?

ஒரு கோவிலில் அல்லது அரண்மனைச் சுவரில் உள்ள ஓவியம் அழிந்து விட்டால் அதைச் சரி செய்யச் சித்திர வல்லுனர்கள் (*Picture Restorers*) இருக்கிறார்கள். அண்மையில் ஸ்ரீரங்கம் வேணுகோபால ஸ்வாமி கோவிலிலும் சென்னை ராஜாஜி ஹாலிலும் இப்பணி சிறப்பாக நடந்தது. சித்திரங்களில் உள்ள தூசிகளை அகற்றுதல், புகை யேறிக் கறுப்பாக உள்ள பகுதிகளைச் சுத்தப்படுத்துதல், பூச்சிக்களைக் கொல்

முன் பக்கத்தில்:

- தேசிய கலைக்கூடத்தின் தோற்றம்.
- திருவாலங்காட்டில் தோண்டி எடுக்கப்பட்ட சோமாஸ்கந்தரின் சிலை. சிவனும் பார்வதியும் மட்டுமே புதையலில் கிடைத்தது. ஸ்கந்தர் காணப்படவில்லை.

இங்கே: ○ அறுபது அடி நீளமான திமிங்கிலத்தின் எலும்புக் கூடு.



ஆதல் மற்றும் கீழே விழுந்து விடுவது போல் ஒட்டிக் கொண்டிருக்கும் சித்திரச் சுவர்களை அவ்வாறு விழாமல் தடுக்க ஒருவிதப் பசையின் உதவியினால் பழைய படி ஒட்டி விடுதல் என்று பல உபாயங்கள் உண்டு. தனிப்பட்ட சித்திரங்களை மெழுகு, துணி முதலியவற்றின் உதவியுடன் அப்படியே அலக்காக எடுத்துச் சீர் செய்யச் சில இயந்திரச் சாதனங்களும் உள்ளன. சித்திரம் எப்படி வரையப்பட்டதோ அப்படியே அசலாக வண்ணங்களைப் பூசியும் சரி செய்வார்கள்.

சென்னை மியூசியத்தில் எண்ணிக்கைக் கணக்குப்படி எத்தனை காட்சிப் பொருள்கள் உண்டு?

சுமார் இரண்டு லக்ஷத்து முப்பத்தையாயிரம் கலைப் பொருள்கள் இருக்கின்றன. தினமும் பல்வேறு பிரிவுகளில் மேலும் கலைப் பொருள்கள் சேர்க்கப் பட்டு வருகின்றன.

இந்த மியூசியத்தில் உள்ள அதிசயமான பொருள்கள் ஏதாவது உண்டா?

எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக தாவரவியல் பகுதியில் பழைய கொச்சி சமஸ்தான திவானிடமிருந்து 1904-ம் ஆண்டு டாக்டர் பிட்ம என்ற மியூசியம் அதிகாரி 1400-ம் ஆண்டிலிருந்து 1900 வரை வளர்ந்த ஒரு தேக்குமரத்தினை வாங்கி அதன் ஒரு பகுதியைப் பாதுகாத்து வருகிறார்கள். இந்தத் தேக்குமரத்தில் உள்ள கோடுகள் (year rings) ஒவ்வொன்றும் ஓர் ஆண்டினைக் குறிக்கும். அந்த ஆண்டில் அதிக மழை பெய்ததா? அல்லது வறட்சி அதிகமா? என்பன போன்ற விவரங்களைக்கூட அந்தக் கோடுகளின் நீளங்களைக் கொண்டு அறிய முடிகிறதாம். மேற்படி ஐந்நூறு ஆண்டுகளில் நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வருடங்களை அம்மரத்தில் குறித்துவைத்திருப்பதால் இம்மரம் மியூசியத்துக்கு வருபவர்களைக் கவர்கிறது.

அக்குறிப்புக்கள்: — 1498 — வாஸ்கோடகாமா இந்தியா வருகை; 1639 — செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப் பட்டது; 1674 — பாண்டிச்சேரியின் தோற்றம்; 1770—வந்தவாசிச் சண்டை; 1799—திப்பு சுல்தான் மறைவு; 1858—இந்தியா ஆங்கில மன்னராட்சியின் கீழ் வருதல்.

மியூசியத்தில் இப்போது புதிதாகச் சேர்க்கப்பட்ட பொருள்கள் என்னென்ன?

தொல்பொருள் பிரிவில் நாகலாபுரத்திலிருந்து (திருச்சி ஜில்லா) கண்டெடுக்கப்பட்ட ஒரு விநாயகர் விக்கிரகமும்,

உடையார்பாளையத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஓர் அய்யனார் சிலையும் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மானிடவியல் பகுதியில் சேலம் ஜில்லாவிலுள்ள சிரப்பள்ளி கிராமத்திலிருந்து பழைய வேலைப்பாடமைந்த சில தங்க நகைகள் வாங்கப்பட்டுள்ளன.

நாணயப் பிரிவில் திருச்சியையடுத்த கோவிந்தப்புத்தூரிலிருந்து ராஜ ராஜ சோழன் காலத்திய 669 செப்புக் காசுகள் வாங்கப்பட்டுள்ளன.

விலங்கியல் பிரிவில் சென்னை மிருகக் காட்சிச் சாலையிலிருந்து இறந்துபோன ஆஸ்திரேலிய நாட்டு கறுப்பு வாத்து பஞ்சடைத்துப் பாதுகாத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வாத்து நாற்பத்தாறு அங்குல நீளம் இருப்பதே ஓர் அதிசயம்தானே!

தாவரவியல் பகுதியில் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த விதம் விதமான 128 பாசி வகைகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் பாசி வகைகளை அந்நாட்டு மியூசியத்துக்காக அனுப்பி அதற்குப் பதிலாகப் பெற்றவை இவை.

சென்னை மியூசியத்தின் சிறப்பு அம்சங்கள்:

1. சுங்க அதிகாரிகள் விக்கிரகத் திருட்டுக்களைக் கண்டு பிடிக்க வசதியாக இருக்கும் பொருட்டு அவர்களுக்கு ஒரு விசேஷப் பயிற்சி வகுப்பு அண்மையில் இந்த மியூசியத்தில் நடைபெற்றது. பதினைந்து நாட்கள் நடந்த இந்தப் பயிற்சியின்போது விக்கிரகங்களின் தன்மைகள், அவற்றின் தொன்மை மற்றும் விசேஷ அம்சங்கள் விளக்கப்பட்டதாம். இதைப் போல யாத்திரீகர்களுக்குச் சிலைகளைப் பற்றியும், விக்கிரகங்களைப் பற்றியும் விளக்கிக் கூற 'கைடு'களுக்கும் ஒரு பயிற்சியளிக்கப்பட்டது.

2. சென்னை மியூசியம் தனது நூற்றாண்டு விழாவை 1951-ம் ஆண்டு கொண்டாடியது. இந்த விழாவினைத் தொடங்கி வைத்தவர் அன்று பாரதப் பிரதமராக இருந்த திரு நேருஜி அவர்கள். 'நேஷனல் ஆர்ட் காலரி' எனப்படும் தேசிய கலைக்கூடம் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டதும் அன்றுதான்!

3. புத்த மதத்தைப் பற்றிய கலைப் பொருள்களுக்காக ஒரு தனிப் பிரிவும் உலகெங்கிலுமிருந்து சேகரிக்கப்பட்ட நாற்பத்து மூவாயிர ஸ்டாம்புகளைக் கொண்ட பிரிவும் அண்மையில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன.

4. சென்னை மியூசியத்தினை மாலை ஐந்து மணிக்குப் பூட்டி விடுவார்கள். அதன் சாவிகளைச் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் ஒப்படைத்து விடுவார்களாம். அடுத்த நாள் மியூசியத்தைத் திறக்கத் தேவைப்படும்போது சேவகர் கையெழுத்திட்டு அந்தச் சாவிக் கொத்தை வாங்கிக் கொள்ள வேண்டுமாம்!



'மேலே உள்ள ஜிப்ஸி பெண் யாரோ?' என்று கேட்கிறீர்களா? இந்தப் பெண்ணின் உடைகளையும் அணிமணிகளையும் சற்றே உற்றுப் பாருங்கள். என்ன திகைக்கிறீர்கள்? ஆம், அத்தனையும் காய்கறிகள்! வெண்டைக்காய் மாலை, கோவக்காய் ஒட்டியாணம், வாழை இலைப் பாவாடை, மிளகாய், முருங்கைக்காய், எலுமிச்சம் பழம் எல்லாமே இந்தப் பெண்ணின் அலங்காரத்துக்கு உதவி இருக்கின்றன. அசோக் நகர் ஜவாஹர் வித்யாலயாவில் ஃபான்ஸி டிரஸ் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போன இந்தப் பெண்ணின் பெயர் பானு. காய்கறிகள் விற்கும் விலையில் இப்படியொரு உடையைத் தினமும் அணிந்து கொள்ளக் கட்டுப்படியாகுமா என்ன?

படமும் தகவலும்: கிரிஜா ராஜன்


175 ml.
Incremin* syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
டிராப்ஸ் : 2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப் : 14 வயது வரையில்
Sisca's INC-363 C/75 Tam

டினோசார்கள்

கிருஷ்ணவேணி

மாறிக் கொண்டே வரும் உலகத்தில் ஊர்ந்து செல்லும் குணமுடைய ரெப்டைல் என்னும் பிராணிகளில் ஒரு புதிய இனம் தோன்றலாயிற்று. இவைகளையே ஆராய்ச்சியாளர்கள் டினோசார் (Dinosaur) ராட்சத மிருகங்கள் என்கிறார்கள். டினோசார் என்றால் பயங்கரமான பல்லி — (*Terrible Lizard*) என்று பொருள். இவை பல்லிகளைப் போன்ற ரெப்டைல் இனத்தைச் சேர்ந்ததானாலும் டினோசார் எனப்படுபவை பல்லிகள் அல்ல. டினோசார் எல்லாமே பயங்கரமானவையும் அல்ல. இவற்றில் சில மிக மிகப் பெரியவை, சில மிகச் சிறியவை. சில சாதுவானவை. பல சாகபட்சிணிகள் அதாவது தாவரங்களே இவற்றின் உணவு. சில மாமிச பட்சிணிகள். சில டினோசார் உண்மையிலேயே பயங்கரமானவை.

டினோசார்கள் வாழ்ந்த காலம் 150 மிலியன் ஆண்டுகள். டினோசார்களில் பல்லாயிரம் வகைகள் இருந்திருக்கின்றன. குறைந்தது 5000 வகைகளாவது ஜீவித்திருக்கலாம். ஒரு வகை அழியும்போது அதன் இடத்தில் மற்றொரு வகை டினோசார் தோன்றி அதை இட்டு நிரப்பின. இத்தனை ஆயிரம் வகை இருந்தாலும் இவைகளைப் பாகுபடுத்தும் தனிப் பெயர்கள் ஏதும் இல்லை. இன்றைய விஞ்ஞானிகள் அவைகளுக்கு அளித்துள்ள விஞ்ஞானப் பெயர்களால்தான் நாம் அவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

டினோசார்கள் திடீரென்று ஒரு நாள் உலகில் தோன்றிவிடவில்லை. ஊர்ந்து செல்லும் பிராணிகள் வாழ்ந்த காலத்தில் அவற்றிலிருந்து மெதுவாக முன்னேற்றம் அடைந்த பிராணி இனம்தான் டினோசார். முதலில் இவை மிகச் சிறியவைகளாகவே — இரண்டு மூன்று அடி நீளமே உள்ளவைகளாகத் தோன்றின. மற்ற ரெப்டைல்களைப் போல் இவை குளிர் ரத்தம் உடையவை. ஆனால் ஒரு வித்தியாசம். இவை நான்கு கால்களினால் பூமியில் ஊர்ந்து செல்லாமல் பின் இரண்டு கால்களினால் மட்டுமே மெள்ள நடந்து சென்றன. முன்னிரண்டு கால்களும் வளைந்த நகங்களைக் கொண்டு கைகளாகப் பயன்பட்டன. பல்லியின் வால் போன்ற நீண்ட சதைப் பற்றுடைய வால், அதன் உடல் சம நிலையில் நிற்பதற்கு உதவின.



ஆரம்ப கால டினோசார்கள் சிறியவைகளானாலும் மூர்க்க குணமுடையவை. மாமிசம் உண்ணும் டினோசார்கள் ஊர்ந்து செல்லும் சிறிய பிராணிகளை உண்டு வாழ்ந்தன. இரையைப் பற்றிக் கிழித்துத் தின்பதற்கு ஏற்றபடி இவற்றின் முன் கால்கள் அமைந்திருந்ததோடு இவை வேகமாக இயங்கவும் செய்தன.

தாவரங்களையே உண்டு வாழ்ந்த டினோசார்களுக்கு அன்

றைய உலகம் கலைமிக்க, பசுமையான தாவரப் போர்வை கொண்டு மூடப்பட்டிருந்தது. தாவர உண்ணிகளான டினோசார்கள் நாளெல்லாம் தாவரங்களைச் சாப்பிட்டுக் கொண்டே வாழ்ந்தன. சாக பட்சிணிகளான டினோசார்கள் உருவத்தில் மிகப் பெரியவைகளாகவும் வளர்ந்தன. இந்நிலையில் இவற்றின் உடலை இரு கால்களால் மட்டுமே தாங்கி நிற்க இயலவில்லை. ஆகவே நான்கு கால்களையும் ஊன்றி நிற்கும் நிலைக்கு இவை மாறலாயின. சிறிய முன்னங் கால்கள் வளர்ச்சி பெற்றன. நான்கு கால்களை ஊன்றிய நிலையில் பூமியில் உள்ள தாவரங்களை அணுகுவதும் சுலபமாக இருந்தன இவைகளுக்கு. பூதாகாரமான பெரு உடலை நான்கு கால்களினாலும் நாளெல்லாம் தாங்கி நிற்பதும் கூடக் கஷ்டமாக இருந்தன. ஆகவே, சாகபட்சிணிகளான ராட்சத உடலைக் கொண்ட டினோசார்கள் நாளின் பெரும் பொழுதை நீரில் கழிக்கலாயின. உடலின் கனத்தைத் தாங்குவதற்குத் தண்ணீர் உதவியது. ஏனென்றால் இவற்றின் பூத உடல்களில் பாதி நீரில் மிதந்தபடி இருந்தன.

நீரில் இருப்பது இன்னொரு வகையிலும் சாகபட்சிணிகளான டினோசாருக்குச் சாதகமாக இருந்தது. மிகப் பெரியதும் மூர்க்க முடையதுமான மாமிசப் பட்சிணிகளான இரண்டு கால் டினோசார் சகோதரர்களிடமிருந்து ஒதுங்கி வாழவும் வசதியாக இருந்தது. ஏரியின் நடுவில் தனக்குச் சுவையான உணவாகக்கூடிய ஒரு டினோசார் இருப்பதை இரண்டு கால் மாமிசப் பட்சிணியான டினோசார் பார்த்தாலும் தங்கள் கால்களை அவை ஈரமாக்கிக் கொள்ள விரும்புவதில்லை. இது சாக பட்சிணிகளுக்குச் சாதகமல்லவா ? சாகபட்சிணிகளான டினோசார்கள் மெதுவாகவே நகரும், பார்வைக்கும் விகாரமாக இருக்கும். கூரான பற்களோ, நகங்களோ கிடையாது. நிலத்தில் வேட்டையாடிய பயங்கரமான டினோசார்களிடமிருந்து நீர் நிலைகள்தான் இவைகளைக் காத்தன.

பயங்கரமான டினோசார்களில்முக்கியமானவை டைரானோசரஸும் (*Tyranna-saurus*) அலோசாரஸும் (*Allosaurus*) மாகும். டைரானோசரஸ் என்றால் பயங்கரப் பல்லிகளின் அரசன் (*King of the Tyrent Lizards*) என்று பொருள். அலோசாரஸ் என்றால் மற்றொரு பல்லி (*Other Lizard*) என்று பொருள். இதற்குப் பாயும் பல்லி (*Leaping Lizard*) என்றும் ஒரு பெயர் உண்டு. இவை இரண்டுமே மாமிசப் பட்சிணிகள். படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா? முன்னங் கால்கள் வளர்ச்சி அடையாது கைகளைப் போல் இருக்கின்றன. பின்னங் கால்களால் நிற்கின்றன.

டைரானோசரஸ் பதினெட்டிலிருந்து இருபது அடிகள் உயரம் வரை வளர்ந்தன. நிலத்தில் வாழ்ந்த மாமிசம் தின்னும் டினோசார்களில் இதுவே மிகப்பெரியது. இதன் தலை பிரும்மாண்டமானது. அதற்கு ஏற்றபடி வாய். பெரிய





ஒரு கெஜ அகலத்துக்கும் அதிகமாக இதனால் தனது வாயைத் திறக்க முடியும். இந்த வாயில் ஏராளமான கூரிய பற்கள் நிறைந்திருந்தன. கால்களின் விரல்களில் கழுகினுடையதைப் போன்ற கூரான நகங்கள் இருந்தன. டைரானோசரஸினுடைய வாலோ மிக நீளமானதும் கனமானதும்கூட. இத்தகைய வால் இம்மிருகத்தை நிமிர்ந்த நிலையில் நிற்பதற்கும் நடப்பதற்கும் உதவியாக இருந்தன.

அலோசாரஸ் என்ற பாயும் பல்லி டினோசாரும் மாமிசப் பட்சிணியே. இது தனது பின்னங் கால்களினால் பாய்ந்தும் தாவியும் இரையைப் பிடிக்கும். இது டைரானோசரஸைப் போலப் பெரியதோ, பயங்கரமானதோ இல்லை. ஆனாலும் இன்று பூமியில் வாழும் மாமிசம் உண்ணும் பிராணிகளைவிடப் பெரியதும், பயங்கரமானதுமாகும். வாலின் நுனியிலிருந்து தலை வரை இதன் நீளம் முப்பத்தைந்து அடிகள். பின்னங் கால் பறவையினுடையதைப் போன்று — வளைந்த நகங்களையுடைய மூன்று விரல்கள். ஸீஸாவைப் போல் இம்மிருகம் சம நிலையில் இயங்க நீண்ட வால் உதவியது. முன்னங் கால்களான சிறு கைகளில் கொக்கி போன்ற நகங்கள் உள்ள மூன்று விரல்கள். தலையோ பிருமாண்டம். முதலையின் தாடைகள் போன்றும் உறுதியும் கூர்மையுமான ஏராளமான பற்களோடும் விளங்கின.

சாகபட்சிணிகளான டினோசார்களில் பல அலோசாரஸை விடப் பெரியவைகளாக இருந்தாலும் இதனோடு அவைகளால் போராட முடியவில்லை. நான்கு கால்களால் இயங்கும் அவைகளைவிட இரண்டு கால்களாலேயே அலோசாரஸ் வேகமாக இயங்கியது. பெரிய வால், கூரிய பற்கள், கொக்கி போன்ற நகங்கள் ஆகியவையெல்லாம் அலோசாரஸுக்கு நல்ல ஆயுதங்களாகப் பயன்பட்டன. அலோசாரஸிடமிருந்து தப்பத் தாவர உண்ணிகளான டினோசார்கள் நீரில் இறங்கித் தங்களைத் தற்காத்துக் கொண்டதில் வியப்பில்லை.

இந்தப் பூதாகாரமான டினோசார்கள் வாழ்ந்தாலும் இவைகளுக்கு உணவாகச் சிறிய டினோசார்களும் ஜீவித்திருந்தன. தோற்றத்தில் இதே மாதிரியானாலும் உருவத்தில் சிறியவைகளான இவைகள் ராட்சத டினோசார்களுக்கு உணவாயின. இந்த நிலையில் மாமிச பட்சிணிகளான டினோசார்களிடமிருந்து தப்பி உயிர் வாழ டினோசார்களுக்கு இயற்கை உதவியது.

கழுதையின் மூக்கு

மெர்க்குரி எம். ராஜகோபாலன்


முதன்முதலில் கழுதை படைக்கப் பட்ட போது அதன் மூக்கும் உடலைப் போலவே ஒரே நிறமாகவே இருந்த தாம். பிறகு திடீரென்று ஒரு நாள் அதன் மூக்கு வெளுத்துவிட்டது. அதன் கதையை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா ?

முதல் கழுதை ஒரு நாள் வழக்கம் போல் வண்ணானிடம் உள்ள அழுக்குத் துணிகளை மூட்டை மூட்டையாகச் சுமந்து வந்து ஆற்றங் கரையில் சேர்த்துவிட்டு - வழக்கமாகச் செய்வதைப் போல் ஒரு குட்டிச் சுவரண்டை வந்து அங்கே நின்று கொண்டு காற்றில் அடித்து வரும் கந்தல் துணிகளைத் தின்றபடியே மெள்ளக் கண் அயர்ந்து விட்டது. திடீரென்று யாரோ இளக்காரமாய்ச் சிரிப்பது போல் இருந்தது. மெள்ளக் கண் விழித்துப் பார்த்து யாரும் இல்லாததால் மீண்டும் மெள்ளக் -கண் மூடியது.

மறுபடியும் ஓர் எக்காளச் சிரிப்பு. கண் விழிக்கக்கூடச் சோம்பல். ''ஏ, கழுதையே..... கொஞ்சம் கண் விழித்துப் பார். நான்தான் குட்டிச்சுவர் பேசுகிறேன்'' என்றது. கண் விழித்துக் குட்டிச்சுவரைப் பார்த்துக் கோபமாக ''ஏன், என்னைப் பார்த்துக் கேலி செய்கிறாய், இன்றைக்கு ?'' என்றது.

''அட பைத்தியமே ! உனக்கு மூளையே கிடையாதா ? தினம் அழுக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறாய்? வெளுத்துப் பிறகு அந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு போகிறாய் ? எவ்வளவு நாள்தான் இப்படி வேலை செய்து கொண்டு இருப்பாய். எப்படி வெளுக்கறாங்கன்னு கத்துக்கிட்டா நீயும் உன் பசங்களும் இப்படிக் கால் வலிக்க வேலை செய்து கூலியை உன் யஜமானன்கிட்டே தராமல் நீயே வைச்சுக்கலாம் இல்லையா?'' என்று ஆசையைத் தூண்டிவிட்டது. ஆசை யாரை விட்டது ?

அவ்வளவுதான் ''காள், காள்'' என்று கத்தியபடியே கழுதை நாலு கால் பாய்ச்சலில் வண்ணானின் வீட்டை நோக்கி ஓடியது. அங்கே வண்ணாத்தி அழுக்குத் துணிகளையெல்லாம் நனைத்து வெள்ளாவிப் பானையின் மேல் அடுக்கி வைத்து அடுப்பை மூட்டி ஆவி காட்டிக் கொண்டிருந்தாள். நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்த கழுதை தன் எசமானியைக் கண்டவுடன் சற்று நின்று அவள் அங்கிருந்து வெளியே போன பிறகு வந்தது. வெள்ளாவியில் வெந்து கொண்



கோடைமழை கொள்ளையாகக் கொட்டிட வேண்டும்—நான்
குடைபிடித்துப் பள்ளிக்கூடம் சென்றிட வேண்டும்
ஆடை எல்லாம் நனைந்து உடல் குளிர்ந்திட வேண்டும்—என்
ஆசை தீர ஆடியதில் மகிழ்ந்திட வேண்டும்.

வண்ணப்படம் : வித்யாவ்ரதா

— குடுக்கையார்



டிருந்த துணிகளைக் கொண்டு 'அதை எடுத்து வெளுக்கக் கற்றுக் கொள்ள லாம்' என எண்ணி அந்த மூட்டையி லிருந்து ஒரு துணியை இழுக்க முயற்சி செய்தது. அதைச் சுற்றிப் பலமாக ஒரு பெரிய துணி கட்டியிருந்ததால் அதன் முயற்சி பலன் அளிக்கவில்லை.

குட்டிச்சுவர் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வரவே வேகமாக ஓடிப் போய்த் தூரத்திலிருந்து ஓடி வந்து வெள் ளாவி மூட்டையில் முட்டியது. அவ் வளவுதான். பாதி முகம் வெள்ளாவி மூட்டைக்குள் போய்ப் புகுந்து கொண் டது. என்ன முயன்றும் முகம் வெளியே வரவில்லை. சூடோ தாங்க முடியவில்லை. கத்த முடியாதபடி எங்கும் துணிகள் வேறு. ரொம்ப நேரம் கஷ்டப்பட்டுப் பிறகு இரண்டு அழுக்குத் துணி சகித மாய்த் தன் முகத்தை வெளியே இழுத் துக் கொண்டது. பாவம், ஒரே எரிச் சல். எங்கேனும் தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தபடி ஆற்றங் கரைக்கே ஓடியது. தண்ணீரில் முகத்தைக் கழுவி யது. வெள்ளாவி பட்ட இடம் முழுதும் வெளுத்துப் போய்விட்டது. கழுதைக்கு அழுகை அழுகையாய் வந்தது. அரச மரத்தடிப் பிள்ளையாரிடம் போய்த் தான் செய்த தவற்றை மன்னித் துப் பழையபடியே தன் முகத்தை மாற் றும்படி வேண்டியது. ஆனால் பிள்ளை யாரோ இனி எல்லாக் கழுதைகளையுமே இதே போல் மாற்றி விடுவதாகக் கூறவே, கழுதை மெள்ள நடந்த படி தன்னையும் அறியாமல் பழைய சுவரின் அருகே வந்து நின்றது.

''என்ன கழுதையாரே !'' என்று சுவர் கேட்டது. நல்ல ஆத்திரத்தோடு கழுதை பின்னங் கால்களைத் தூக்கி எட்டி ஓர் உதைவிட்டது. குட்டிச்சுவர் இடிந்து விழுந்தது. தான் முதலில் செய்த தவற்றை மீண்டும் செய்யா மல் இருக்கவே இன்றும் கழுதை வேலை முடிந்ததும் குட்டிச்சுவர் அருகே போய் நிற்கிறது. சுவருக்குப் பைத் தியமா என்ன, மீண்டும் கழுதையிடம் உதை வாங்கி இடிந்து விழ? ஆகவே அது இப்போதெல்லாம் கழுதையோடு பேசுவதே இல்லை !



மனைவி: உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு என்ன பிரயோசனம்? ஒரு குடம் தண்ணிக்கு வழி உண்டா?

கே. வேங்கடசாமி




பந்தயத்தில் வெற்றி பெற்றவன்: ஏண்டா என்னைக் குத்துகிறாய்?

மற்றவன்: நீ ஓட்டப் பந்தயத்தில் ஜெயித்ததினால் இந்த வருஷம் குத்தும் அடுத்த வருஷம் விளக்குமாகப் பரிசளிக்கலாமென்று...!

எஸ். பத்மனாபன்


சிக்கச் சிக்க....



"நீதான் பக்காத் திருடனாச்சே, எப்படி ஜெயிலுக்கு வந்தே?"

"திருடப் போன வீட்டிலே ஒரு தொட்டி நிறையத் தண்ணியைப் பார்த்து மயங்கிப் போய் அங்கேயே குளிக்க ஆரம்பிச்சேன். சத்தங்கேட்டு வந்து பிடிச்சுட்டாங்க!"

ரா. ரா.



ஆசிரியர்: உலகிலேயே பெரிய கண்டம் எது?

மாணவன்: இப்போது நான் உங்களிடம் மாட்டிக் கொண்டதுதான் சார்!

டி. பாலாஜி



"ஐயையோ! ரேடியோவை இப்படி ஏண்டா போட்டு உடைக்கிறே?"

அப்பாதான் ரேடியோவைச் சின்னது பண்ணுன்னார். உடைக்காமல் எப்படிச் சின்னதாகப் பண்ண முடியும்?"

பிரபா



கிராமத்துக்காரர்: நம்ம பையனை எப்படியாச்சும் உங்க கல்லூரியிலே சேத்துக்கணுமுங்க!

— ஆருத்ரா

தெரியுமா?



1794. வடகிழக்குக் கனடாவிலுள்ள ஓர் உள்நாட்டுக் கடலுக்கு அதைக் கண்டு பிடித்தவரின் பெயரையே வைத்துள்ளார்கள். அந்தப் பெயர் என்ன?

1795. காண்டர்பரி கதீட்ரலில் 1170 டிசம்பர் 29-ம் தேதியன்றுகொலை செய்யப்பட்டது யார்?

1796. நைல் நதியின் உற்பத்தியை 1858-ல் கண்டவரின் பெயர் என்ன?

1797. கர்னாடக இசையில் மும்மூர்த்திகளாக விளங்கியவர்கள் யார்?

1798. இவர்களுடைய பிறந்த ஊர் எவை?

1799. அரிஸோனாவிலுள்ள லோவெல் வான் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 1930-ல் கண்டு பிடிக்கப்பட்ட கிரகத்தின் பெயர் என்ன?

1800. சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஆதியில் ஆபத்தில்லாத ஒரு விளக்கைக் கண்டு பிடித்துக் கொடுத்தார்கள்.. அதன் பெயர் என்ன?

1801. முதல் முதல் விண்வெளியில் வெற்றிகரமாக செலுத்தப்பட்ட கோளின் பெயர் என்ன?

1802. இங்கிலாந்தின் ராணியாக ஒன்பதே நாட்கள் இருந்தது யார்?

1803. துவிச் சக்கர வண்டியில் — சைக்கிள் — முதன் முதலில் நடந்த பந்தயம் எங்கே எப்போது தெரியுமா?

1804. லெப்டினண்ட் கர்னல் அலக்ஸே ஆர்கிபோவிச் லியோனவ் (*Lt. Col. Aleksey Arkhipovich Leonov*) இந்தப் பெயர் உங்களுக்கு எதை நினைவுக்குக் கொண்டு வருகிறது?

1805. நண்டு எப்படி இடம் விட்டு இடம் பெயருகிறதென்று தெரியுமா? நடந்து என்று கூறுவது சுலபம். ஆனால் அது சரியான விடையல்ல.

1806. தா (*Dhow*) என்பது என்ன?

1807. போக்குவரத்து சாதனங்கள் முன்னேற்றம் பற்றிய ஒரு பொருட்காட்சிசாலை லண்டனில் உள்ளது. அது எங்கே என்று தெரியுமா?

1808. ஒரு விளையாட்டுக் கோஷ்டியிடையே ஃபோர் (*Fore*) என்ற குரல் ஒலிக்குமானால் அது எந்த விளையாட்டு என்பதைக் கூற முடியுமா?

1809. ஃபாக்ஸ்ஹண்டர் ட்ராஃபி (*Foxhunter Trophy*) எந்த விளையாட்டுக்கு வழங்கப்படுகிறது தெரியுமா?


1810. ஒரு விளையாட்டில் உங்களை க்வார்ட்டர் பேக் (*Quarter Back*) என்ற இடத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுவீர்களானால் அது என்ன விளையாட்டாக இருக்கும்?

1811. ஒரு விளையாட்டில் 'டியூஸ்' (*Deuce*) என்று கூறப்படும். அந்த விளையாட்டு எது?

1812. ஜெஸ்ஸி ஓவன்ஸ் (*Jesse Owens*) என்பவர் 1936-ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் நான்கு தங்கப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு போனார். அவை எந்த விளையாட்டுக்களுக்கு, தெரியுமா?

1813. இங்கிலீஷ் கால்வாயை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் யார் தெரியுமா?

தெரியுமே!



1794. ஹட்ஸன் விரிகுடா. 1795. தாமஸ் பெக்கெட். 1796. ஜான் ஹானிங் ஸ்பீக் (**John Hanning Speke**). 1797. தியாகப்பிரும்மம், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாம சாஸ்திரிகள். 1798. மூவரும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூரிலேயே பிறந்தவர்கள். 1799. புளூட்டோ. 1800. டேவி விளக்கு. 1801. ஸ்புட்னிக் - 1. 1802. ஜேன் கிரே என்ற பெண். 1803. பாரிஸ் நகரில் 1868-ம் ஆண்டு மே மாதம் 31ந் தேதியன்று. 1804. விண்வெளியில் நடந்த முதல் மனிதர் என்பதை. 1805. நண்டு தனது பக்கவாட்டில் நகர்ந்து செல்லுகிறது. (**In a sideways direction**) 1806. நீண்ட அமைப்பில் மிக வேகமாகச் செல்லக்கூடிய அராபியர்களின் படகுக்கு இப்பெயர். 1807. க்ளாஃபாம் (**Clapham**) என்னுமிடத்தில். 1808. கால்ஃப் பந்து ஆட்டம் என்று கூறி விடலாம். 1809. பல தடைகளைக் குதிரை மீதமர்ந்தபடி தாண்டி முன்னேறும் (**Show jumping**) ஒரு விளையாட்டுக்கு. 1810. அமெரிக்கர்களின் ஃபுட்பால் ஆட்டமாக இருக்கும். 1811. லான் டென்னிஸ். 1812. நூறு, இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயங்கள், லாங் ஜம்ப் (உயரம் தாண்டுதல்) 4—100 மீட்டர் ரிலே ஆகிய விளையாட்டுகளுக்காக. 1813. மாத்யூ வெப் (**Matthew Webb**) என்பவர்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.


ராசுவும் வாசுவும்
—கடத்தல் கயவர்களைச் சிறைசெய்த சாதனை!
ராசுவும் வாசுவும் மாலைநேரத்தில் நடக்கிறார்கள். கண்டகாட்சி அவர்கள் பேச்சை நிறுத்தியது
"அதோ பாரு ராசு, திருடனில்லே அது கடத்தல்மன்னன் கண்ணாயிரம்."
"விரைந்து வாருங்க இன்ஸ்பெக்டர், ஓடி மடக்கிடுவோம் கடத்தல்காரங்களைப் கப்புனு சிறைபிடிப்போம்."
கடத்தல்காரங்க ஓடிப்பார்த்தாங்க, ஆனா வழுக்கிவிழுந்தாங்க. கால் தரைப்பிடிப்பில்லாம தடுமாறி உருண்டாங்க.
"அவங்க காலடியில் உருட்டிவிட்டேன் பாப்பின்ஸ் பாக்கெட்டுகளை! இப்போ பேக்கெட்டுகளைப் பிரிச்சிடுவோம், பங்கிட்டு சுவைத்திடுவோம்."